

கோகுலம்

GOKULAM ஆகஸ்ட் 2000 ரூ. 6/-




மேகாவின் மெகா லட்சியம்!






வரைந்து பழகுங்கள்

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!






விடை: 1) சைக்கிள் பெல் 2) கூடையில் புத்தகம் 3) சைக்கிள் பெடல் 4) சைக்கிள் ஸ்டாண்டு 5) அபாய விளக்கு


பிருந்தாவனம்

பொருத்தமான கண்ணாடி துண்டு எது?




விடை: F

இங்கு சம்பந்தமில்லாத பொருள் எது?



விடை: வாணலி



கோகுலம்

2000

ஆகஸ்ட்

மலர் : 18

இதழ் : 7

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

சென்னைக்கு விஜயம் செய்த பிரதமர் தரமணியில் 'டைடல் பார்க்' திறந்து வைத்திருக்கிறார். 'மென்பொருள் பூங்கா' என்று தமிழில் சொல்கிறார்கள். கம்ப்யூட்டர் தொடர்பான பல நிறுவனங்கள் இங்கே செயல்படும்.

கம்ப்யூட்டர் மூலம் தகவல் தொடர்பு என்பது நாளுக்கு நாள் பிரபலமாகி வருகிறது. டெலிவிஷன் போலவே கம்ப்யூட்டரிலும் நிறைய அனுகூலங்களும் உண்டு, ஆபத்துகளும் உண்டு. அலாவுதினின் அற்புத விளக்கு போல கம்ப்யூட்டர் சரியாகப் பயன்படுத்தப்படும் போது நமக்குத் தேவைப்படும் தகவல்களையெல்லாம் தந்து, நமது அறிவுச் செல்வத்தைப் பெருக்கும். அன்றாட அலுவல்களை எளிமையாக்கி, சீராகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நேரத்தோடும் செய்து முடிக்க உதவும். கடிதங்களை துரிதமாக அனுப்பலாம், பதில் பெறலாம்! 'கிரெடிட் கார்டு' உள்ளவர்கள் கம்ப்யூட்டர் மூலமே அவசரத்துக்குச் சில பொருள்களை வாங்கலாம். பங்கு மார்க்கெட்டில் ஷேர்களை விற்கலாம், அல்லது வாங்கலாம். இப்படி பல அனுகூலங்கள் இருப்பினும், இதற்கு மறுபுறமும் உண்டு!

ஓடி ஆடி விளையாடினால் உடம்புக்கு நல்லது. ஆனால் 'கம்ப்யூட்டர் கேம்ஸ்' நமது நேரத்தை வீணடிக்கிறது. உடல் ஆரோக்கியத்துக்கு உதவுவதற்குப் பதில் கண்களைக் கெடுக்கிறது; சோம்பலை வளர்க்கிறது. கம்ப்யூட்டர் உதவியுடன் அரட்டை (chat) அடிப்பது; நெட்வொர்க்கில் பல்வேறு நிலையங்களை அணுகி சுவாரஸ்யமாக ஏதாவது அகப்படுமா (surf) என்று தேடிக் கொண்டிருப்பது, வீ.டி. ரோம் பயன்படுத்தி கம்ப்யூட்டரில் சினிமா பார்ப்பது என்று உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொள்ளவும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தலாம். ஏன், சூதாட்டத்தில் ஈடுபடுவதற்குக் கூட கம்ப்யூட்டர் பயனாகிறது!



• மென்பொருள் பூங்கா

கம்ப்யூட்டர் என்ற பாட்டில் பூதத்தை இன்று திறந்து விட்டாயிற்று. அதுவும் நமக்கு அடிமையாகப் பணியாற்றக் காத்துக் கொண்டிருக்கிறது. அதைப் புத்தி சாலித்தனமாகப் பயன்படுத்தினால் நாமும் முன்னேறி நாட்டையும் உயர்த்தலாம்.

ஆனால் நமது பலவீனங்களுக்குத் தீனி போட அதை உபயோகித்தால் நாமும் கெட்டு நாட்டையும் கெடுத்த துரோகிகள் ஆவோம். எதிர்காலத்தில் 'சர்வம் கம்ப்யூட்டர் மயம்' என்ற நிலைதான் உருவாகும். அந்த எதிர்காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்கள் சாமர்த்தியத்தை எதிர்நோக்கி இருக்கிறது!

அன்புடன்,


கி. ராஜேந்திரன்,
- ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

கோகுலம்

ஆகஸ்ட் 2000


இந்த இதழில்...



அறிவு ஜீவி அறிவுமதி!

அறிவுமதி அன்று மன்னரிடம் வேலை கேட்கச் சென்றான். ஆனால் மன்னரோ 'நாளை வா' என்றும் 'உன்னிடத்தில் மூன்று கேள்விகள் கேட்கப்படும். அதற்கு சரியான பதில் அளித்தால்தான் வேலைக்குத் தகுதியான ஆள் என்று தேர்ந்தெடுக்கப்படுவாய்' என்றும் கூறிவிட்டார். அறிவுமதி வீட்டிற்கு வந்து கவலைப் பட்டான். அவன் மனதில், அது எந்த மூன்று கேள்வியாக இருக்கும் என்பதே கேள்விக்குறியாக இருந்தது. அப்போது மன்னரின் வேலையாள் ஒருவன் வந்து, "நாளை மன்னர் கேட்கும் மூன்று கேள்விகள் எனக்குத் தெரியும்" என்று கூறினான்.

அறிவுமதியும் ஆவலாகக் கேட்டான். "முதல் கேள்வி உன் வயது என்ன? என்று மன்னர் கேட்பார். அதற்கு 40 என்று பதி





வளிக்க வேண்டும். இரண்டாம் கேள்வி எத்தனை வருடம் கல்வி கற்றாய்? அதற்கு 10 வருடம் என்று பதில் கூற வேண்டும். மூன்றாம் கேள்வி நம் நாட்டில் காவல் அதிகாரி நல்லவரா அல்லது கிராம நிர்வாக அதிகாரி நல்லவரா என்று கேட்பார். அதற்கு இருவருமே என்று பதில் கூற வேண்டும்" என்று கூறினான்.

அறிவுமதியோ கேள்விகளை மறந்து பதில்களை மட்டும் நினைவில் வைத்திருந்தான். '40, 10 இருவருமே' என்று சொல்லிக் கொண்டே அரண்மனை நோக்கி நடந்தான். ஆனால் மன்னரோ சற்றுக் கேள்வியை மாற்றினார். முதல் கேள்வி, "எத்தனை வருடம் கல்வி கற்றீர்?" அதற்கு அறிவுமதி, "40" என்று பதில் அளித்தான். தலையாட்டிய மன்னர் இரண்டாம் கேள்வியைக் கேட்டார். "தங்கள் வயதென்ன?" இதற்கும் அறிவுமதி அவசரப்பட்டு, "10" என்று பதிலளித்தான். சட்டென்று மன்னருக்குக் கோபம் பொங்கியது. "இதைச் சொல்லும் நீர் முட்டாளா அல்லது கேட்கும் நான் முட்டாளா?" என்று கூற, அறிவுமதியோ "இருவருமே" என்று பதிலளித்தான்.



மன்னருக்குக் கோபம் வந்து இரண்டு மாதச் சிறைத் தண்டனை அளித்தார். சுய மாகச் சிந்திக்காமல் பதில் அளித்ததை எண்ணி வருந்தினான் அறிவுமதி.

— அ. ஹாஜா நூருல்லா, தரங்கம்பாடி.



இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 'இளஞ்செம்பூர்' என்ற சின்ன கிராமம்தான் எனது சொந்த ஊர். பள்ளிக்கூடம் போவ தென்றால் எனக்குப் பாகற்காய் போல கசக் கும். ஒவ்வொரு நாளும் நான் பள்ளிக்குச் செல்ல எனக்குக் கூலியாக ஒரு 'மிக்சர்' பொட்டலத்தைக் கொடுத்து அனுப்புவார் கள். பாக்கெட் மணியாக நாலணா காசும் கிடைக்கும். பள்ளிக்கூடம் செல்வதற்குள் மிக்சரைத் தின்று முடித்து விடுவேன். கையிலிருக்கும் காசுக்கு இடை

குண்டோதரன் குரலுக்குப்

வேளையின் போது ஐந்து பைசா குச்சி ஐஸ் வாங்கி நானும் நண்பர்களும் சாப் பிடுவோம். உறவினர்கள் பலர் ஆசிரியர்களாய் இருந்தும் எனக்குப் படிப்பே வரவில்லை. ஆனால் பாடுவது, ஆடுவது என்றால் கூப் பிடு செந்திலை என்பார்கள். எனது கட் டைக் குரலை வைத்துக் கொண்டு சந்திர பாபு பாடிய பாடல்களில் ஒன்றைப் பாடிய படி ஆடுவேன். எல்லோரும் சிரிப்பார்கள். என்னைப் பாராட்டுகிறார்களா இல்லை கேலி செய்கிறார்களா என்று எனக்குத் தெரியாது. இப்படியே ஐந்தாம் வகுப்பு வரை ஓடிவிட்டது.

பள்ளியில் கடைசி வருடம் படித்த போது பேச்சுப் போட்டியும் பாட்டுப் போட்டியும் நடத்தினார்கள். நான் பாட் டுப் போட்டிக்குப் பெயர் கொடுத்திருந் தேன். மறுநாள் போட்டி. முதல் நாள் குச்சி ஐஸ்களை வாங்கிச் சாப்பிட்டேன். விளைவு! தொண்டை கட்டிக் கொண் டது. எருமை மாட்டின் குரல் போல் எனது குரல் வினோதமாக ஒலிக்கத் தொடங் கியது. மறுநாள் விடிந்தது. பாட்டுப் போட்டி பயத்தில் காய்ச்சலே வந்து விட் டது. பள்ளிக்கு மட்டம் போட்டு விடலாம் என்று முடிவு செய்து வீட்டிலேயே இருந்து விட்டேன். ஆனால் விதி தலைமையாசிரி யர் உருவத்தில் வீட்டிற்கே வந்து விட்டது. எங்கள் பள்ளி தலைமையாசிரியர் கோபால் எங்கள் வீடு தேடி சைக்கிளில் வந்து விட்டார். அவர் எனது தந்தையைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். அவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வது வழக்கம். தலைமையாசிரியர் புறப்படும் போது 'செந்தில் பள்ளிக்குப் போய் விட்டானா?' என்று கேட்க, 'இல்லை' என்று என் தாயார் சொல்ல, 'வரச் சொல்லுங்கள் எனது சைக் கிளில் அழைத்துச் செல்கிறேன்' என்று

என் குழந்தைப் பருவம்



கையோடு கூட்டிப் போய் விட்டார். வேறு வழியின்றி பள்ளிக்குப் போனேன்.


காலை பதினோரு மணிவாக்கில் போட்டிகள் தொடங்கின. எனக்கு முன்பு பாடிய எனது நண்பன் 'களத்தூர் கண்ணம்மா' படத்தில் கமல் பாடிய 'அம்மாவும் நீயே அப்பாவும் நீயே' பாடலைப் பாடி எல்லோரது கைதட்டலையும் வாங்கிப் போய் விட்டான். அடுத்து நான் அழைக்கப்பட்டேன். உடம்பு உதறல் எடுத்தது. வேறுவழியின்றி ஆசிரியரின் இருக்கை அருகே சென்று கையைக் கட்டிக் கொண்டு பாடத் தொடங்கினேன். 'கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம்' என்ற பாடலை, நான் கர்புர் என்று வினோதக் குரலில் பாட, எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஜலதோஷம் பிடித்த குரலில் நான் பாடியதை, உண்மையான குண்டோதரன் குரலில் பாடியதாக நினைத்து எனக்கே முதல் பரிசைக் கொடுத்தார்கள். என்னால் நம்பவே முடியவில்லை!

அடுத்து பள்ளி ஆண்டு விழா நாடகத்தில் நான், 'மூப்பன்' என்ற பெயரில் குறவர்களின் தலைவனாக நடித்தேன். நாடகம் என்றதும் ஊரே கூடி யது. எங்கள் ஊரில் நிரந்தரமாகக் குடியிருந்த

பரிசு!

செந்தில்






குறவர் குடும்பங்களும் நாடகம் பார்க்க வந்திருந்தனர். நான் குறவர் பேச்சு மொழியில் பேசி நடித்ததைக் கண்டு எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். நாடகம் முடிந்ததும் எனது தலைமையாசிரியர் என்னிடம் வந்தார். நீ பெரிய ஆளாக வருவாய் என்று பாராட்டியபடி என்னை அணைத்துக் கொண்டார். நாடகம் முடிந்த மறுநாள் பள்ளிக்கு லீவு விட்டு விட்டார்கள்.

அம்மாவிற்குச் சாமான்கள் வாங்கி வர கடைக்குச் சென்றேன். அப்போது துப்பாக்கியைத் தோளில் சுமந்தபடி எதிரே இரண்டு குறவர்கள் வந்தார்கள். என் அருகில் வந்ததும், "ஏய் தம்பி... ரொம்ப ஜோரா நடிச்சுப்புட்டே போ! நம்ம ஆளுங்க தோத்தானுங்க! இந்தா, இந்த மடையானைக் கொண்டு போய் அம்மா கிட்டே கொடுத்து ஆக்கிச் சாப்பிடு'' என்றபடி, வேட்டையாடி வைத்திருந்த இரண்டு மடையான் பறவைகளை என்னிடம் கொடுத்தனர். நான் வாங்க மறுத்து விட்டேன். அதில் அவர்களுக்கு நிறைய வருத்தம். அதன் பிறகு அவர்களின் கூடாரம் பக்கமாக நான் போகும் சந்தர்ப்பம் வந்தால் எல்லோரும் கூடி நின்று என்னை வேடிக்கை பார்ப்பார்கள்.

அதற்கு அடுத்த ஆண்டு நடந்த நாடகத்தில் நான் 'பூம் பூம்' மாட்டுக்காரனாக வேஷம் போட்டேன். இதற்கென்று ஒரு கன்றுக் குட்டியை இரவல் வாங்கி வந்து அதற்கு அலங்காரம் செய்தோம். எனது காட்சி வந்ததும் மேடையில் அதை ஏற்றினோம். நான் கன்றுக் குட்டியைக் கையில் பிடித்தபடி 'நல்ல காலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது!' என்றபடி மேளத்தை அடித்தேன். இந்தச் சத்தத்தையும் மேடையில் போடப்பட்டிருந்த பல வண்ண ஒளி விளக்குகளையும் கண்ட கன்றுக்குட்டி மருண்டு துள்ளிக் குதித்தது. ஆனாலும் நான் விடவில்லை. கன்றுக்குட்டி நிஜமாகவே நடிக்கிறது என்று எண்ணி எல்லோரும் கைதட்டினர். ஆரவாரம் செய்தனர். இறுதியாக நான் முழு வசனமும் பேசி முடிப்பதற்குள் என்னை முட்டித் தள்ளிய கன்றுக்குட்டி மேடையிலிருந்து பார்வையாளர்கள் பக்கம் துள்ளிக் குதித்து ஓட, மக்களும் பயந்து ஓட, ஒரே சிரிப்பு. கன்றுக்குட்டியை இழுத்து வரப் போனவர்கள் வெகுநேரமாகியும் வராததால் இரண்டு மாணவர்களையே மாடு போல் நிற்க வைத்து அவர்களின் மேல் ஒரு வேஷ்டியைப் போர்த்தி நாடகத்தை ஒருவழியாக முடித்தோம். அதிலிருந்து ஊரில் நான் பெரிய நடிகன் என்று பெயர் வாங்கினேன்.

அப்பா வற்றல் மிளகாய் மொத்த வியாபாரம் செய்பவர். அவரது கல்லாப் பெட்டியில் கட்டுக்கட்டாக பணம் இருக்கும். அந்தப் பணக்கட்டு ஒன்றிலிருந்து இரண்டு நோட்டுக்களை மட்டும் உருவி எடுத்துக் கொண்டு, நண்பர்களையும் கூட்டிக் கொண்டு சினிமாவிற்குப் போய்





விடுவேன். அப்படி ஒருமுறை அப்பா பணத்தைத் திருடிக் கொண்டு நாங்கள் படம் பார்க்கப் போனோம். அது எம்.ஜி.ஆர் நடித்த 'நம் நாடு' படம். அதில் எம்.ஜி.ஆர் 'திருடாதே! பாப்பா திருடாதே! வறுமையை நினைத்து பயந்து விடாதே திறமை இருக்கு மறந்து விடாதே' என்று பாடுவார். பணம் திருடி வந்து பார்த்த படத்தில் இப்படியொரு பாட்டு வருமென்று நான் நினைக்கவில்லை. அந்தப் பாட்டு எனக்காகப் பாடுவது போலிருந்தது. இந்தப் பாட்டு என்னை வெகுவாகப் பாதித்து விட்டது. வீட்டில் வசதிகள் இருந்தாலும் சொந்தமாகச் சம்பாதித்து முன்னுக்கு வரவேண்டும் என முடிவு செய்தேன்.

நான்காம் வகுப்பு படித்தபோது வந்த தீபாவளியை மறக்கவே முடியாது. அதிகாலை தொடங்கி மதியத்திற்குள் எல்லா பட்டாசுகளையும் வெடித்துத் தீர்த்து விட்டேன். அப்படியும் ஆசை தீரவில்லை. எனவே வெடிக்காமல் கிடந்த வெடிகளையெல்லாம் எடுத்துப் பிரித்து, அவற்றிலிருந்த வெடிமருந்தைச் சேகரித்தேன். அப்போது தெரு நண்பர்களும் வந்து சேர்ந்து கொண்டார்கள். பின்பு எரிந்து முடிந்த புஸ்வாணம் ஒன்றில் உதிரியாக இருந்த வெடி மருந்தைக் கொட்டி ஒரு சிறு திரியை அதில் பொருத்தியதும் யார் தீ வைப்பது என்பதில் பெரிய போட்டியே வர இறுதியாக எனக்கே வாய்ப்பு கிடைத்தது. நான் தீ வைத்த அடுத்தகணம், புஸ்... என்று சீறியபடி பக்கத்து வீட்டின் கூரையில் போய் விழுந்து, உடன் தீ பிடித்துக் கொண்டது.

வீட்டுக்காரர்கள் வெளியே வந்து ஒருவழியாகத் தீயை அணைத்தனர். இதைக் கண்ட நண்பர்கள் என்னை தனியே விட்டுவிட்டு ஓடியே விட்டனர். நான் விழித்த விழியைப் பார்த்து, என்னைத் துரத்த ஆரம்பித்தார் அந்த வீட்டுக்காரர். முடிந்தவரை ஓடினேன். முடியவில்லை. இறுதியாக எனக்குச் சர வெடிகளைப் போல் சரியான தர்ம அடி கிடைத்தது.


புஸ்வாணம் சீறிப் பாய்ந்து கூரையில் விழுந்ததற்குக் காரணம், எரியாத இரண்டு 'ராக்கெட்'களையும் பிரித்து அவற்றில் கட்டியாக இருந்த வெடிமருந்தையும் புஸ்வாணத்தில் நிரப்பியிருந்ததுதான் என்பது பிறகு புரிந்தது.

எனக்குப் பரீட்சை நேரம் வந்து விட்டால் வயிற்றைக் கலக்க ஆரம்பித்து விடும். குறிப்பாக கணக்குப் பரீட்சை என்றால் பள்ளிக்குப் போகும் வழியில் நானும் நண்பனும் ஒளிந்து கொள்வோம். மறுநாள் ஆசிரியரிடம், வாந்தி, வயிற்று வலி என்று அழுது நடிப்போம்.

சினிமாவில் நடித்துப் புகழ்பெறவேண்டும் என்ற ஆசையோடு நான் சென்னை வந்த போது எனக்குப் பன்னிரண்டு வயது. 'யூசுப்' என்ற முஸ்லீம் நண்பர்தான் என்னைச் சென்னைக்கு அழைத்து வந்தார்.

சென்னையில் நாடகக் கம்பெனிகளில் உதவியாள் வேலை கிடைத்தது. கூடவே சிறு சிறு வேடங்களும் கிடைத்தன. 'தூறல் நின்னுப் போச்சு' படத்தில்தான் எனக்குப் பெரிய வாய்ப்புக் கிடைத்தது. அதிலிருந்து நான் உங்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். கவுண்டமணி என்னை அடிப்பது சினிமாவிற்காகவும் நீங்கள் சிரிப்பதற்காகவும்தான்! அது போல் நீங்கள் யாரையும் விளையாட்டுக்குக் கூட அடிக்கக்கூடாது.உங்களுக்குப் பிடித்தமான துறையில் வாழ்க்கையில் முன்னேற முயற்சி செய்யுங்கள்; வெற்றி நிச்சயம். அதுக்கு நான் ஒரு எடுத்துக் காட்டு.

சந்திப்பு : **வெங்கி அங்கிள்**



பறவைகள் ஆராய்ச்சி செய்து வருகிறேன்!

முழு மூச்சுடன்...

பறவைகள் ஆராய்ச்சி என்ற அட்டைப் படக் கட்டுரையைப் படித்தேன். எனக்குப் பறவை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆசை எழுந்தது. உடனே அதைச் செயல் படுத்த ஆரம்பித்தேன். முன்பெல்லாம் டி.வி. பார்த்துப் பொழுது போக்கிக் கொண்டிருந்த நான் முழு மூச்சுடன் பறவை ஆராய்ச்சியில் நேரத்தைச் செலவிட்டு வருகிறேன். அதற்காகத் தங்களுக்கு நன்றி தெரிவிக்கும் வேளையில், மேலும் இது போன்ற புதுமையான, சுவையான விஷயங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

– எஸ்.கௌரி,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம்.

நாங்களும்...

ஜூன் இதழில் வெளியான விடுமுறை அனுபவங்களைப் படித்தபோது நாங்களும் அவர்களுடன் விடுமுறையைக் கழித்த உணர்வு ஏற்பட்டது. ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற ஒட்டகங்கள் நன்றாக இருந்தன.

– பி. கோவிந்தசாமி,
கோட்டப்பட்டி.

பெயர் பிரச்னை

திலகவதி ஐ.பி.எஸ். அவர்களின் குழந்தைப் பருவம் மிக்க சுவாரசியமாக இருந்தது. பெயரால் அவருக்கு ஏற்பட்ட பிரச்னைகளை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. குழந்தைப் பருவ அனுபவங்கள் என்பதால் திலகவதி அவர்கள் சிறந்த எழுத்தாளர் என்பதைக் குறிப்பிடவில்லையா?

– சி. மஞ்சுளா,
ஆத்தூர், சேலம்.

ஓவியம் அருமை!

புலி என்றால் எனக்குப் பயம் அதிகம். ஆனால் சென்ற இதழ் கட்டுரையில் வெளியான வண்ணப்படங்கள் புலியை மிகவும் ரசிக்க வைத்தன. அதேபோல் 'கேட்டதைக் கொடுக்கும் யந்திரம்' கதைக்கு வரைந்த ஓவியர் ரொம்ப அருமையாக வரைந்திருக்கிறார்.

– மோ. சண்முகம்,
எட்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
திருச்சி.

மன நிறைவு!

மலேரியாவை வெற்றி கொண்ட 'ரொனால்டு ராஸ்' பற்றிய தகவல்களை இதுவரை நான் படித்ததில்லை. அதிகம் கேள்விப்படாத விஞ்ஞானியைத் தெரிந்து கொண்டதில் மன நிறைவு.

– ஜூலியட்ராணி,
கோவை.

புத்தகம் வாங்க...


'உங்கள் நூலகம்' பகுதி பயன் தருகிறது. புதிய புத்தகங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. எங்கள் உறுப்பினர்களுக்காக ஒரு புத்தகத்தை வாங்குவதற்காகக் கடிதம் எழுதிவிட்டோம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!


– அரிமதி தென்னகன், சிறுவர் இலக்கியச் சிறகம், புதுவை.

திரட்டித் தாருங்கள்!

சர்வதேச மாணவர் அடையாள அட்டை இந்தியா உட்பட 93 நாடுகளில் யுனெஸ்கோ நிறுவனம் வழங்குவது கோகுலத்தில் படித்த பிறகே தெரியவந்தது. இது போன்ற அரிய தகவல்களைத் திரட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– இரா. சோனியா,
பத்தாம் வகுப்பு,
ஆண்டரசன்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.





குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. இரவில் இரை தேடும் பறவை. இதன் அலறல் அச்சத்தை ஏற்படுத்தும் (4)

4. பாதை என்பதை இப்படியும் கூறலாம் (2)

5. சோழிகளைப் போட்டு அவை காட்டும் எண்களுக்கு ஏற்பக் கட்டங்களில் காயை நகர்த்தும் விளையாட்டு (3)

7. ஆகாயத்தோட்டி (3)

13. ஒளியைப் பல திசைகளில் பிரதிபலிக்கும் விலை உயர்ந்த வெண்ணிறக்கல் (3)

15. பொட்டுப் போல் இலை இருக்கும்; குச்சிப் போல் காய் காய்க்கும் மரம் (4)

வலமிருந்து இடம்

2. நவரத்தினக் கற்களில் ஒன்று (4)

6. கள்ளி, பேரீச்சை ______ இனத் தாவரங்கள் (2)

8. புனித்த பால் (3)

12. அறிவையும் நிலவையும் குறிக்கும் ஒரு சொல் (2)

14. கதவுக்கு இது இருந்தால்தான் பாதுகாப்பு (2)

16. சிவந்த பழுப்பு நிறத் தோலுடைய இனிப்பும் புளிப்பும் கலந்த சுவையுடைய சிறு பழம் (4)

மேலிருந்து கீழ்

1. ஆறுகளில் ஒன்று (4)

2. மிளகு போன்று விதையுடைய பெரிய பழம் (4)

3. பூனையைக் கண்டால் எலிக்கு ______ (3)

10. நோய் உண்டாக்கும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர் கிருமி (3)

கீழிருந்து மேல்

9. ஜெராக்ஸ் (3)

11. நமது தேசியப் பறவை (3)

15. அக்காலத்தில் அடையாளம் காட்டுவதற்கு இது இடப்பட்ட சின்னம் பயன்பட்டது (4)

16. ரோம் நகரம் இந்நாட்டில் உள்ளது (4)

— ஆர். ரவிச்சந்திரன்,
பதினோராம் வகுப்பு, அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி,
பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.

விடை: 72 ம் பக்கம்

இரும்பைத் தங்கமாக்கிய கல்!



பண்டரிபுரத்தில் வாழ்ந்தவர் பரிச பாகவதர். அவர் மகாலட்சுமியை பூஜித்து வந்தார். அவரது மனைவியின் பெயர் கமலஜா.

"தாயே! சதா வீட்டிலே அது இல்லை இது இல்லை என்ற கூச்சல் எழுவதால் மனம் ஒன்றி பூஜையில் ஈடுபட முடிவதில்லை" என்று தினமும் வருந்தி லக்ஷ்மி தேவியிடம் முறையிடுவார்.

ஒருநாள் திருமகள் பிரசன்னமாகி, "பக்தா! இது ஸ்பரிச வேதிக்கல். இதை இரும்பில் தேய்த்தால் பொன்னாகும். ரகசியமாய் வைத்திரு. பேராசைப் படாதே! இனிமேல் நிம்மதியாய் பஜனை செய்" என்று ஒரு கல்லைக் கொடுத்து மறைந்தாள்.

பாகவதரின் மகிழ்ச்சி சொல்லி முடியாது. பழைய இரும்புகளைப் பொன்னாக்கி ஆனந்தமாக வாழ்ந்தார்.

பாகவதரின் பக்கத்து வீட்டில் நாமதேவர் என்ற பாண்டுரங்க பக்தர் வசித்தார். ஸ்ரீ கிருஷ்ணனை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றும் அதைத்தா, இதைத்தா என்று கேட்காத உயர்குணம் படைத்தவர்.

நாமதேவரின் மனைவி ராஜாபாயும் கமலஜாவும் நெருங்கிய தோழியர். இருவரும் ஒன்றாகவே ஆற்றுக்குக் குளிக்க, தண்ணீர் எடுத்து வரச் செல்வார்கள்.

ஒருநாள் ராஜாபாயிடம் கமலஜா, "கல்யாணத்தின்போது எப்படி இருந்

தாய்! இப்படிக் கறுத்து, இளைத்து உருமாறி விட்டாயே! பாண்டுரங்கன் கல் நெஞ்சன்! அவனை எத்தனை பூஜிக்கிறார் நாமதேவர்! ஆனால் ருக்மிணி தேவி பெண் இல்லையா? என் கணவருக்கு வேதிக்கல் ஒன்றைக் கொடுத்திருக்கிறாள்! நேற்றைக்கு என் தேய்ந்து போன தோசைக் கல்லில் அதைத் தடவி பொன்னாக்கிக் கொண்டேன். என்ன இப்படி நடுத்தெருவில் மலைத்து நின்று விட்டாய்! யாராவது பார்த்தால் வம்பு. நட'' என்றாள்.

''நிஜமாகத்தான் சொல்கிறாயா? அந்தக் கல்லை எனக்குக் காட்டுவாயா?'' என்று குரல் நெகிழக் கேட்டாள் ராஜாபாய்.

'வா' என்றழைத்து கல்லைக் காட்டிய தோடல்லாமல் ஒரு பழைய வாணலியில் தேய்த்தாள். தங்கமாக மின்னிய இரும்புச் சட்டியை கீழே வைக்கவே மனம் வரவில்லை ராஜாபாய்க்கு.

அப்போது பாகவதர் கோவிலுக்குப் போயிருந்தார். ''கமலஜா! கொஞ்ச நேரம் உன் சினேகிதிக்கு இதை இரவல் தந்தால் அவளும் உன்னைப் போல் சந்தோஷமாக இருப்பாளில்லையா? உன் கணவர் கோபிப்பாரே என்று யோசிக்கிறாயா? நான் வயிறு நிறைய சாப்பிட்டு ஒருவாரமாகிறது'' என்று மூக்கைச் சிந்தினாள் ராஜாபாய்.

இளகிய மனம் படைத்த கமலஜாவுக்கு மனம் தாளவில்லை. ''ராஜாபாய்! இதனால் உன் தரித்திரம் தீரட்டும். எடுத்துக் கொண்டு போ. நாளை காலைக்குள் என் கணவர் அறியாதபடி கொண்டு வந்துவிட வேண்டும்'' என்று பலமுறை எச்சரித்து விட்டுக் கொடுத் தனுப்பினாள்.

ராஜாபாயின் சந்தோஷம் சொல்லி முடியாது. அவள் கணவர் தையற்காரர். அவளுக்கிருந்த சந்தோஷத்தில் அவருடைய கத்திரிக்கோல், கத்தி, அரிவாள்மனை, ஊசி எல்லாவற்றையும் பொன்னாக்கிவிட்டாள். ஒரு தங்க ஊசியை விற்று தேவையான மளிகை சாமான்



களை வாங்கி வந்தாள்.

அறுசுவை உணவு தயாரித்தாள். கோவிலில் உச்சி காலம் முடிந்து வீடு திரும்பிய

நாமதேவரை "கை, கால் கழுவிக் கொண்டு சாப்பிட வாருங்கள்" என்றழைத்தபடி இலை போட்டுப் பரிமாறினாள்.

"ராஜம்! காலையில் நான் போகும் போது அரிசி இல்லை; பருப்பில்லை என்றாய்! வாசனை மூக்கைத் துளைக்கும் அளவு சமைத்திருக்கிறாய்? இதெல்லாம் யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டார் நாமதேவர்.

"அதெல்லாம் உங்களுக்கேன்? உங்கள் பணி பாண்டுரங்கனைப் பாடுவது. என் பணி உங்கள் உடல் நலத்தைப் பேணுவது" என்றாள் ராஜாபாய்!

"ராஜம்! பிச்சையெடுப்பது கேவலமானது என்பதை நீ அறியாயா? இது எங்கிருந்து வந்தது என்று சொல்லாதவரை சோற்றில் கை வைக்கமாட்டேன்" என்று கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டார் நாமதேவர்.

"கமலஜா வீட்டுக்காரர் ருக்மிணியிடம் வேண்டி ஒரு வேதிக்கல் பெற்றாராம்! ஒரு நாள் அதை உன் வீட்டிலுள்ள இரும்பு சாமானில் தேய்த்துத் தங்கமாக்கிக் கொள்ளேன் என்றாள். நான் வேண்டாம். அதெல்லாம் என் புருஷனுக்குப் பிடிக்காது என்றுதான் முதலில் மறுத்தேன். ஆனாலும் பெண் பிறவியாச்சே! ஒரு நாளாவது திருப்தியா சாப்பாடு போடுவோமே என்று சபலப்பட்டு வாங்கிட்டு வந்துட்டேன். இது எப்படி யாசகமாகும்?" என்றாள் ராஜாபாய்.

"யாசகத்திற்கும் இரவலுக்கும் ரொம்ப தூரமில்லை. சரி. நான் ஸ்பரிச வேதிக் கல்லை இதுவரை பார்த்ததேயில்லை. எடுத்துக் கொண்டு வா. பார்க்கலாம்" என்றார் நாமதேவர்.

கணவர் 'தாம்தூம்' என்று குதிக்கப் போகிறார் என்று பயந்த ராஜாபாய்க்கு நாம தேவர் சாதாரணமாக கல்லைப் பார்க்க வேண்டும் என்றது ஆச்சரியத்தைத் தந்தது. மகிழ்ச்சியோடு ஓடிப்போய் கல்லை எடுத்து வந்து கணவரிடம் கொடுத்தாள்.

"ஒருமுறை நீங்களும் உரைத்துப் பாருங்களேன்" என்று ஆவலோடு கூறினாள்.

"மக்களை மயக்கி அடிமையாக்கி அஞ்ஞானத்தையும் பகைமையையும் ஊட்டும் பேய் நீ" என்று ஸ்பரிசக் கல்லைப் பார்த்துச் சொல்லியபடி வெளியே புறப்பட்டார் நாமதேவர்.

ராஜாபாய் 'கமலஜாவின் வசதியையும் சேர்த்துக் கெடுத்து விட்டோமே! அவளுக்கு என்ன பதில் சொல்வது' என்று நினைத்துக் கலங்கினாள். கணவன் குணம் தெரிந்தும் கல்லைக் காண்பித்தது எத்தனை பெரிய ஆபத்தாய் போயிற்று என்று கதறி அழுதாள்.

வீட்டிற்கு வந்த பரிசபாகவதர் "கமலஜா! அந்த ஸ்பரிசக் கல்லை எடுத்து வா. அதோடு பழைய மண்வெட்டி ஒன்றிருக்கிறதே, அதையும் கொண்டு வா" என்றார்.

கமலஜா தயங்கியபடி "பக்கத்து வீட்டு ராஜாபாய் ரொம்பக் கஷ்டப்படுகிறதாகச் சொன்னாள். சற்று முன்தான் உபகாரமாயிருக்கட்டும் என்று கொடுத்தேன். இதோ நொடியில் வாங்கி வந்து விடுகிறேன்" என்றாள்.


"அடிப்பாவி! கெடுத்தாயே காரியத்தை! கஷ்டப்படுகிறாள் என்றால் புளி, பருப்பு, மிளகாய் கொடு. புடவை, வேஷ்டி கொடு. பால், தயிர், அரிசி, கோதுமை கொடு. இப்படிக் கல்லைக் கொடுத்திருக்கிறாயே! நாமதேவன் கண்ணில் பட்டிருந்தால் யானை வாயில் சென்ற கரும்புதான்! போ, போய் வாங்கி வா" எனக் கூப்பாடு போட்டார், பாகவதர்.

கமலஜாவுக்கு ராஜாபாய் அழுவதைப் பார்த்ததுமே பகீர் என்றது. அப்போது

"பேசும்போது எதுக்குடா ஸ்கேல் வச்சுக்கிறே?"

"எதையும் அளந்து பேசத்தான்!"

- திவாகர், ஈரோடு



நாமதேவர் வந்தார். "கல்லை என்ன செய்திர்கள்?" என்று ராஜாபாய் கேட்க,

"சந்திரபாகா நதியில் சங்கமமாகி விட்டது" என்று சொல்லிவிட்டு பூஜை அறைக்குள் போய்விட்டார்.

"பாவப்பட்டுக் கொடுத்த என் புத்தியை ஜோட்டால் அடிச்சாலும் போதாது" என்றபடி ஓடிய கமலஜா பாகவதரிடம் நடந்தது நடந்தபடி கூறினாள்.


பாகவதர் ஆத்திரம் கொண்டு நாமதேவர் வீட்டிற்கு வந்தார்.

"பொன்னையும் மண்ணையும் சமமாகப் பார்க்கும் ஞானம் கோடியில் ஒருவருக்கு வரலாம். நீங்கள் கோடியில் ஒருவர். நான் சாமானியன். கஷ்டப்பட்டு பல நாள் வேண்டி ஸ்பரிச வேதியைத் திருமகளிடமிருந்து வரமாகப் பெற்றிருந்தேன். அதைச் சந்திரபாகா நதியில் எறிய உங்களுக்கு யார் அதிகாரம் தந்தது? நியாயமுள்ளவரானால் உங்கள் மனைவியிடம் கொடுத்து எங்களிடம் சேர்த்திருக்க வேண்டும். தரித்திரமில்லாமல் குடும்பத்தைக் காப்பாற்ற வக்கில்லை! என் பெண்டாட்டியிடம் புலம்பும்படி விட்டு வைத்திருக்கிறீர்! பக்திதான் பெரிதென்றால் உங்களுக்கேன் குடும்பம்? கல்யாணம்? மனைவி?" என்று கூச்சலிட்டார்.

வாசலில் சிறு கூட்டம் கூடி நாமதேவர் செயலைக் கண்டித்தது.

"பாகவதரே! அந்தச் சிறு கல் உங்களைக் கோபம் கொள்ள வைத்திருக்கிறது! நம்மிடையே விரோதத்தை உண்டு பண்ணுகிறது. கல்லின் மேல் வைத்த ஆசையை ரங்கன் மேல் வையுங்கள். பாவம் தொலைந்து முக்தி கிடைக்கும்" என்று சாந்தமாகப் பதில் சொன்னார் நாமதேவர்.

"பேஷ்! அழகாகப் பேசுகிறீர்! பகவானைப் பாடவும் உடம்புக்குச் சக்தி வேண்டும். அந்தச் சக்தி ஏற்பட சாப்பிட வேண்டும். சதா பஜனை பண்ணிக் கொண்டிருந்தால் சாப்பாடு வந்து வாயில் விழுமா? உங்களால் பசியைப் பல நாள் தாங்க முடியும். என்னால் முடியாது. எதற்கு வீண் பேச்சு. என் கல்லை என்னிடம் கொடுத்துவிட்டு வேதாந்தம் பேசும். கேட்டுக் கொள்கிறேன்" என்றவர்



"உங்க மாமாவோட லெட்டரைப் படிச்சா தும்மலா வருமா ஏண்டா?"

"எல்லாம் பொடி எழுத்தா இருக்குமே!"

-தஞ்சை தாமு

நாமதேவரைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் சந்திரபாகா நதிக் கரையில் நிறுத்தினார்.

என்ன நடக்கிறதென்று பார்க்கும் ஆசையில் மக்கள் கூட்டமும் பின் தொடர்ந்து வந்திருந்தது.

சந்திரபாகா நதியில் கூழாங்கற்கள் அதிகம். இதில் ஸ்பரிச வேதிக்கல்லை எப்படி தேடுவது?

நாமதேவர் மார்பளவு ஆழத்தில் நின்றார். "பாண்டுரங்கா! பாகவதரின் மயக்கத்தைத் தீர்த்து வைப்பாய்" என்றபடி கண்மூடி தியானித்து நீருக்குள் முக்குளித்தார். இரண்டு கை நிறைய கூழாங்கற்களை அள்ளி பாகவதர் முன் போட்டார். நாமதேவர் கைபட்டதும் எல்லாம் ஸ்பரிச வேதியாகி இருந்தன.

"பாகவதரே! இதில் உங்களுடையது எது?" என்று கேட்டார். பாகவதர் பிரமித்திருந்தார். ஒரு கல்லை எடுத்து கீழே கிடந்த மாட்டு லாடத்தில் தேய்த்தான் ஒருவன். அது பொன்னாக மின்னியது.

நொடியில் இத்தனை ஸ்பரிச வேதிக் கற்களை கொணரும் சக்தி படைத்த நாமதேவரை ஒரு கல்லுக்காக எத்தனை ஏசி விட்டோம்! அம்பிகையிடம் மாறாத பக்தியும், மோட்சமும் கேட்காமல் கல்லைக் கேட்டோமே என்று கூசினார். நாமதேவர் காலடியில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினார். அவரிடம் உபதேசம் பெற்று விஷ்ணு பக்தர்களுள் சிறந்தவராக வாழ்ந்தார் பாகவதர்.

மாம்பழத்தில் வண்டு

பாம்பு தனக்கென புற்று எழுப்புவது இல்லை. பொந்துகளிலும் வளைகளிலும்தான் அது மறைந்து வாழும். கறையான்களின் புற்றுகளிலும் வாழும். பாம்புக்கு மிகவும் பிடித்த உணவு கறையான். அதை உண்பதற்காகவே புற்றுக்குள் போய் வரும். பாம்பு பாலை நக்கியோ உறிஞ்சியோ குடிக்காது. பிடிக்கும் இரையைக் கூட துண்டாக்காமல் அப்படியே விழுங்கி விடும். பாம்பின் பற்கள் பின்னோக்கி வளைந்து இருப்பதால், பிடிக்கும் இரையைத் தப்ப விடாது. விலா எலும்புகளை பலவாறு அசைத்து ஊர்ந்து செல்லும். இதன் மேல் இமை துடிக்காது. அதனால், விழிகள் எப்போதும் திறந்தபடியே இருக்கும். காதும் கிடையாது. நிலத்தில் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டே அருகில் எதுவும் வருவதை உணர்கிறது.

ஆதாரம்: **ஏன்? ஏன்? ஏன்?**

– ஏ.எல். சாதிக், காரைக்கால்.

வானியலைப் பற்றிக் கூறும் பண்டைய இந்திய நூல் ஆரியபாடியம். இந்த நூல் கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் ஆரிய பட்டரால் இயற்றப்பட்டது. வடமொழியில் எழுதப்பட்ட இந்த நூலின் மூலப் பிரதி கிடைக்கவில்லை. அதன் மொழி பெயர்ப்பு மலையாள மொழியில் கிடைக்கப் பெற்றதால் நாம் இன்று அந்த நூலின் முழுச் சிறப்பையும் அறிய முடிகிறது.


ஆதாரம் : **எதனாலே... எதனாலே... எதனாலே...**


– ச. ஸ்ரீராம், வேலூர்.

வெப்ப நிலை மானியைக் கொண்டு தான் வெப்ப நிலையைக் கணக்கிட முடியும் என்றில்லை. கிரிக்கெட் என்ற பெயரில் உள்ள ஒரு பறவையின் கிரீச்சிடும் சத்தத்தைக் கொண்டும் கணக்கிடுகிறார்கள். ஒரு நிமிடத்துக்கு அந்தப் பறவை எத்தனை தடவை குரல் கொடுக்கிறதோ அந்த எண்ணிக்கையை நாலால் வகுத்து வரும் விடையுடன் 40ஐ கூட்டினால் வெப்பத்தைக் கண்டுகொள்ள முடியுமாம்!

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.


சீனர்கள் இருவர் சந்தித்தால், முகத்தில்








ருப்பது எப்படி?



கண்ணாடி அணிந்திருப்பவர் அதைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டுதான் பேசுவார். அவ்வாறு கழற்றாமல் பேசினால், எதிராளியை அவமதிப்பதாகும் எனக் கருது கிறார்கள்.





ஆதாரம் : **உலக நாடுகளின் சுவையான செய்திகள் நூலிலிருந்து**
தகவல் : பாலு, சென்னை.

மாம்பழத்தில் வண்டு எவ்வாறு உயிருடன் இருக்கிறது என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. தாய் வண்டு மாம்பூவிலேயே முட்டையிட்டு விடுகிறது. முட்டைகள் கொட்டையில் பொரிந்து புழுக்களாகி, கொட்டையில் இருக்கின்ற பருப்பைத் தின்று ஜீவிக்கின்றன. பிறகு வண்டுகளாக மாறி கொட்டையின் ஓட்டைத் துளைத்துக் கொண்டு வெளியே வருகின்றன. நாம் மாம்பழத்தைச் சாப்பிட்டு விட்டு கொட்டைகளை எறிகின்ற போதுதான் அவற்றிற்கு விடுதலை கிடைக்கிறது.

ஆதாரம் : **அறிவு வளர்க்கும் அற்புதச் செய்திகள்;**
– மலர் சூர்யா, வில்லியனூர்.

உலகத்திலேயே முதல் கலங்கரை விளக்கம் கி.மு. 300ல் அலெக்ஸாண்ட்ரியா வளைகுடாவிலுள்ள ஒரு தீவில்தான் கட்டப்பட்டது. டாலமி என்னும் மன்னர் இதைக் கட்டினார். ஒரு ஸ்தூபி கட்டி அதன் மேல் கட்டைகளைப் போட்டு எரித்தார். இதன் வெளிச்சம் 48 கி.மீ. தூரம் வரை பரவியிருந்ததாம்!


– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

தென் அமெரிக்க கடலோரத்தில் காணப்படும் அனப்லெப்ஸ் என்ற மீனுக்கு நான்கு கண்கள் உள்ளன. மேலே உள்ள இரு கண்களும் நீர் மட்டத்துக்கு மேல் உள்ளதைப் பார்க்கவும் கீழே உள்ள கண்கள் நீருக்குள் பார்க்கவும் பயன்படுகின்றன. இரு ஜோடிக் கண்களையும் ஏக காலத்தில் உபயோகித்து நீர் மட்டத்திற்கு மேலும் கீழும் அதனால் பார்க்க முடியும்!

– எஸ். லாவண்யா, சீர்காழி.

பிருந்தாவனம்





● மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.


● ஒரு தடவை சிரிப்பதற்கு உடலில் மூன்றரை கலோரி செலவழிகிறது.

● எலிகள் வாந்தி பண்ணுவதே கிடையாது.

● 'ஒரு நிறம் சொல்லுங்களேன்' என்று கேட்டால் ஐவரில் மூவர் 'சிவப்பு' என்றே சொல்லுவர்.

– ஜெ. சி. திவ்யா,
தூத்துக்குடி.

பாதரசத்திற்கு மற்றொரு பெயர் உயிர் வெள்ளி. உலோகங்களிலேயே திரவ மயமாக இருப்பது பாதரசம் ஒன்றே. பழங்காலத்தில் க்விக் என்ற சொல்லுக்கு உயிருள்ளது என்று பொருள். பாதரசம் தரையில் விழுந்தால் சிறு சிறு துளிகளாக உருண்டோடும். இதனால்தான் இதற்கு இப்பெயர் வந்தது. கிரேக்கப் புராணங்களில் 'மெர்க்குரி' என்னும் தேவதை, கடவுள் கட்டளைக்குப் பணிந்து எப்பொழுதும் சிறு சிறு வேலைகளைச் செய்ய ஓடிக் கொண்டிருக்குமாம். பாதரசமும் தரையில் ஓடுவதால் இதற்கு 'மெர்க்குரி' என்ற பெயர் வந்தது.




ஆதாரம் : **அறிவியல் 1000**
-எம்.எஸ். உம்மு அம்மாரா,
பன்னிரண்டாம் வகுப்பு,
இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.

இறந்தவர்கள் தமது சொத்துகள் குறித்து உயில் எழுதுகிறார்களல்லவா? இந்த வழக்கம் கி.பி.1102ல்தான் ஆரம்பமாயிற்று. சிசிலி நாட்டு மன்னன் ரோஜர் என்பவனே அதைத் தொடங்கி வைத்தான். 'WILL' என்ற ஆங்கிலச் சொல்தான் உயில் என்று தமிழாகி உள்ளது.

ஆதாரம் : **பொது அறிவுக் களஞ்சியம் என்ற நூல்**
- மலர் சூர்யா,
வில்லியனூர்.

● கோல்ஃப் பந்திற்குள் தேனிருக்கும்.

● யானையும், குதிரையும் நின்று



கொண்டே தூங்கும்.

● எறும்புகள் உறங்குவதே இல்லை.

● அரேபியாவில் ஆறுகள் இல்லை.

● ஆப்கானிஸ்தானுக்கு இரண்டு தேசியக் கொடிகள்.

● சிங்கப்பூரில் காகம் இல்லை.

- ஆர். திவாகர்,
ஆறாம் வகுப்பு,
ஈரோடு - 5.

மதிப்பு!

வாண்டுதாசன்

கடை வீதிக்குச் சென்ற ராமசாமி ஒரு செருப்புக் கடைக்குள் நுழைந்தார். அவருடைய செருப்பு பழசாகி விட்டதால் புதிதாக எதை வாங்கலாம் என நோட்டமிட்டார். கண்ணாடி அலமாரியில் வைத்திருந்த செருப்புகளில் ஒன்று அவரைக் கவர்ந்தது.

"அது எவ்வளவு?" எனக் கேட்டார் ராமசாமி

"நூற்றி அறுபது ரூபாய்" என்றார் கடைக்காரர்.

ராமசாமி பேரம் பேசி நூற்றி நாற்பதுக்கு வாங்கினார். கடைக்காரர் அந்த ஜோடி செருப்புகளை ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டுக் கொடுக்க, வாங்கி தான் கொண்டு வந்திருந்த பையில் வைத்துக் கொண்டு வந்தார்.

வெளியே நடைபாதையில் பொம்மைகள் விற்றனர். அதிலிருந்த களி மண்ணில் செய்யப்பட்ட ஒரு முயல் பொம்மையை ராமசாமி எடுத்தார்.

"எவ்வளவுப்பா இது?" எனக் கேட்டார்.

"இருபது ரூபாங்க?" என்று கடைக்காரர் கூற அதையும் வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்தார் ராமசாமி.

"ஏய் பொம்மையே என் மீது சாயாமல் தள்ளிப் போ" என்றது செருப்பு.

"ஏன்?" எனக் கேட்டது பொம்மை.

"என் மீது சாய்வதற்கு உனக்கு எந்தத் தகுதியும் இல்லை. தெருவோரத்தில் புழுதியில் இருந்தவன் நீ. ஆனால் நான் பளபளப்பான கண்ணாடி அலமாரியில் இருந்தவன். என் மதிப்பு நூற்றி அறுபது ரூபாய். நீயோ வெறும் இருபது ரூபாய்தான் தெரியுமா?" என்று செருப்பு பெருமையோடு கூறியது. பொம்மை எதுவும் பேசாமல் மௌனமாய் நகர்ந்து கொண்டது.

வீட்டை அடைந்த ராமசாமி செருப்புகளை கவரிலிருந்து எடுத்து வாசலில் போட்டார். பிறகு உள்ளே சென்றவர் பொம்மையை அங்கிருந்த கண்ணாடி அலமாரியில் வைத்துவிட்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தார்.

உடனே பொம்மை "என்ன செருப்பாரே இப்போது நிலைமை என்னவென்று பார்த்தீரா? உங்களுக்குக் கடையில் இருக்கும்வரைதான் அலங்காரம். வேறொருவரிடம் வந்துவிட்டால் மதிப்பில்லை. சொந்த இடத்தில் ராஜாவாக இருந்தால் மட்டும் போதாது. வெளியே மற்றவர்களும் மதிக்கும் வகையில் நம் குணம் இருக்க வேண்டும்" என்றது.



செருப்பு மௌனமாய் தன் பேச்சுக்கு வெட்கியது.

புதிர் உலகம்!

I) நூற்றி ஐம்பது மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுதினார்கள். இதில், பத்து சதவிகித மாணவர்கள் வரவில்லை. அறுபது சதவிகித மாணவர்கள் தேறினார்கள். மீதமுள்ளோர் தேறவில்லை. அப்படியெனில், நுழைவுத் தேர்வுக்கு எத்தனை பேர் வரவில்லை? எத்தனைபேர் தேறினர்? எத்தனை பேர் தேற வில்லை? எத்தனை பேர் தேர்வுக்கு வந்தனர்?

— ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்.

II) ஒரு கோயிலின் நான்கு கோபுர வாசலுக்கும் தீபம் ஏற்ற, ஒவ்வொரு வாசலுக்கும் 4 லிட்டர் எண்ணெய் தேவைப்படுகிறது. நாம் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லும் அளவிற்கு முதல் வாயிலில் கொடுப்பார்கள். முதல் வாயிலில் 4 லிட்டர் போக மீதம் எடுத்துச் செல்லும் (எண்ணெய்) அளவுக்கு மறு வாயிலில் கொடுப்பார்கள். (உதாரணம்: வீட்டிலிருந்து 1 லி எடுத்துச் சென்றால், முதல் வாயிலில் ஒரு லிட்டர் சேர்த்து இரண்டு லிட்டர் ஆகும்)

இதேபோல 4 வாயில்களிலும் 4லி வீதம் எண்ணெய் ஊற்றி விட்டுத் திரும்ப வரும்போது மீதம் இருக்கக் கூடாது.

எனவே நாம் வீட்டிலிருந்து எவ்வளவு எண்ணெய் எடுத்துச் செல்ல வேண்டும்?

— இரா. பரிமளா, உமா பெண்கள்
உயர்நிலைப்பள்ளி, திருச்சிற்றம்பலம்.

III) தாத்தா முருகனிடம் 100 ரூபாய் கொடுத்து சில்லறை மாற்றி வரச் சொன்னார். ஆனால் அவர் இரண்டு நிபந்தனைகளை விதித்தார். ஒன்று அதில் நோட்டுகளின் எண்ணிக்கை 50தான் இருக்க வேண்டும். ஆனால் ரூபாயின் மதிப்பு 100 ரூபாயாக இருக்க வேண்டும். இரண்டாவது நிபந்தனை அதில் 'இரண்டு ரூபாய்' நோட்டைப் பயன்படுத்தக் கூடாது. 1 ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் நோட்டுகளைத்தான் பயன்படுத்த வேண்டும். முருகனுக்கு நீங்களும் உதவி செய்யுங்கள்.


— கே. ஜோதிராஜன், பத்தாம் வகுப்பு 'இ',
இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி,
அண்ணாமலைநகர், சிதம்பரம்.

IV) ஒரு சில எண்களைக் கூட்டினால் கிடைக்கும் விடையே பெருக்கினால் தலைகீழாகக் கிடைக்கும்.

உதாரணம்: 9+9 = 18 | 24+3 = 27
9x9 = 81 | 24x3 = 72

இது போல் வேறு சில எண்களை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? முயலுங்கள் பார்ப்போம்!

— பி. காஞ்சனா,
கருவம்பாளையம்,
திருப்பூர்.



V) I) 2 குதிரையின் விலை 15 மாட்டின் விலைக்குச் சமம். 2 மாட்டின் விலை 20 ஆட்டின் விலைக்குச் சமம். 3 ஆட்டின் விலை 20 கோழியின் விலைக்குச் சமம். 1 குதிரையின் விலை ரூ 30,000 எனில் ஒரு கோழியின் விலை என்ன?

II) அம்மா வடை சுடுகிறாள். அப்பா வந்து, இருந்ததில் பாதியும் இன்னொன்றும் எடுத்துக் கொள்கிறார். மகன் வந்து மீதி இருந்ததில் பாதியும் இன்னொன்றும் எடுத்துக்கொள்கிறான். மகள் வந்து இருந்ததில் பாதியும் இன்னொன்றும் எடுத்துக் கொள்கிறாள். அம்மா வந்து பார்க்கும்போது மீதி ஒரு வடை உள்ளது. அம்மா சுட்ட மொத்த வடைகள் எத்தனை?

— பி. மணிகண்டன்,
பதினோராம் வகுப்பு 'அ' பிரிவு,
சீ.ரா. அரசு மேல்நிலை பள்ளி,
திருத்தங்கல்.



VI)I) செந்துறை பள்ளி மாணவ, மாணவியர் சென்னையில் உள்ள உயிரியல் பூங்காவைச் சுற்றிப் பார்த்தனர். அனைவரும் பறவைகள், விலங்குகளை ரசிக்க ஒரு மாணவன் மட்டும் பறவை, விலங்குகளின் தலை, கால்களை கணக்கெடுத்தபடி வந்தான்.

பூங்காவைச் சுற்றி முடித்தவுடன் அந்த மாணவனிடம், "நீ என்னவெல்லாம் பார்த்தாய்? சொல்" என்றார் ஆசிரியர். அதற்கு அவன் 180 தலைகள், 500 கால்கள் பார்த்தேன் என்றான். அப்படியெனில் அவன் பார்த்த விலங்குகள், பறவைகள் எத்தனை? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

II) மாதவன், ஆதவன் இருவரும் ஒரு ஊருக்குச் சுற்றுலா சென்றிருந்தார்கள். மாதவனிடம் 5 பொட்டலங்களும் ஆதவனிடம் 3 பொட்டலங்களும் ஆக மொத்தம் 8 பொட்டலங்கள் இருந்தன. ஒவ்வொரு பொட்டலத்திலும் 3 இட்லிகள் இருந்தன. மதியம் சாப்பிடும் நேரம் நெருங்கியபோது இவர்களின் நெருங்கிய நண்பன் வேலவன் என்பவன் அங்கு வந்து விட்டான். பிறகு மூவரும் அந்த பொட்டலங்களில் இருந்த 24 இட்லிகளைத் தலா 8 வீதம் பகிர்ந்து சாப்பிட்டனர். பிறகு வேலவன் அவன் உண்ட 8 இட்லிக்குப் பதிலாக ரூ 8ஐ மாதவனிடம் கொடுத்து அதை அவர்களைப் பகிர்ந்து எடுத்துக் கொள்ளுமாறு சொல்லி விட்டுப் போய்விட்டான். மாதவனும், ஆதவனும் எத்தனை ரூபாய் எடுத்துக்கொள்வது நியாயம்?

— பெ. இராமசாமி,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசுமேல்நிலைப்பள்ளி,
செந்துறை.

விடைகள்

I) தேர்வு எழுத இருந்த மாணவர்கள் = 150
தேர்வுக்கு வராதோர் = 150X 10/100
= 15 பேர்

தேர்வுக்கு வந்திருந்தோர் = 135 பேர்
தேர்வில் தேறியோர் = 135X 60/100
=81 பேர்

தேர்வுக்கு வந்திருந்தோர்	= 135
தேர்வில் தேறியோர்	= 81
தேறாதவர்கள்	54 மாணவர்கள்

II) 3¾ லிட்டர்

III)

1 ரூபாய்	40	40 ரூ
5 ரூபாய்	8	40 ரூ
10 ரூபாய்	2	20 ரூ
எண்ணிக்கை	50	100 ரூபாய்

IV) இதோ வேறு சில எண்கள்
47+2 = 49 47X2 = 94
497+ 2 = 499 497X 2= 994

V) I) ரூ. 60/- **II)** விடை 22

VI)I) 70 விலங்குகள்
110 பறவைகள்

II) மாதவன் ரூ. 7ம் ஆதவன் ரூ.1ம் எடுத்துக் கொள்வதுதான் நியாயம். ஏனெனில் ஆதவன் கொண்டு வந்த 9 இட்லிகளில் 8–ஐ அவனே சாப்பிட்டுவிட்டு 1 இட்லி மட்டும்தான் வேலவனுக்குக் கொடுத்தான். ஆனால் மாதவன் அவன் கொண்டு வந்த 15 இட்லிகளில் அவன் உண்டது 8 போக மீதி 7ஐ வேலவனுக்குத் தந்துள்ளான்.



மந்திரப் பூ!

சனோபர் தூங்கிப் போய்விட்டாள். அழுது அழுது களைப்பு மேலிட்டதால் அவளுக்குத் தானாகவே தூக்கம் வந்து விட்டது.

பின்னே என்ன... ஒரே பிள்ளை. செல்ல மகள். ஐந்தாம் வகுப்புப் படித்தாலும் இன்னும் மழலை மாறாதவள். அவள் முதுகில் அப்பா இப்படி ஓங்கி அடித்தால் யார்தான் அழாமல் இருக்க முடியும். அதுவும் எப்பொழுதும் சிரித்துப் பேசும் அப்பா இன்று கோபம் பொங்க அடிப்பதற்கு ஓடி வந்த காட்சி அவள் மனதில் விவரிக்க முடியாத வேதனையை ஏற்படுத்தியது.

ஆனால் அவர் கோபப் பட்டதில் ஒன்றும் தப்பு இருப்பதாகத் தெரியவில்லை. செல்ல மகளுக்காக எந்தப் பொருளையும் டஜன் கணக்கில்தான் வாங்கி வருவார். பென்சில் ஒரு பெட்டி.... ரப்பர் ஒரு பெட்டி....

ஆனால்... ஒரு வாரத்தில் அவ்வளவையும் தொலைத்து விடுவாள்.

‘அம்மா ரப்பர் தொலைந்து விட்டது’ என்றவாறு வருவாள். அம்மா திட்டிக் கொண்டே, புதிய ஒன்றை எடுத்துக் கொடுப்பாள். அடுத்த நாள் ‘பென்சில் வேண்டும்’ என்று கேட்டு நிற்பாள். மறுநாள் அந்தப் பென்சிலும் இருக்காது. இப்படிப் பெட்டி பெட்டியாய் ரப்பர்கள்... பென்சில்கள்...

மறதி... மறதி... அப்படி மறதி.

யாருக்குத்தான் கோபம் வராது.

அன்று சனோபர் ரப்பர் கேட்டபோது அம்மா பெட்டியைப் பார்த்தாள். ரப்பர் தீர்ந்து போயிருந்தது. அப்பாவிடம் முறையிட்டாள். வந்ததே கோபம் அவருக்கு.

“போன வாரம்தான் வாங்கித் தந்தேன் என்று கத்தியவர்” பளார் பளார் என்று அடித்தார்.

அம்மா ஓடி வந்தாள். பாட்டி ஓடி வந்தாள்.

முகம்மது ஹில்மி

யாராலும் அவரைத் தடுக்க முடிய வில்லை. சனோபர் அழுதாள். தன் மீதே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. இந்த மறதியால்தானே அப்பா அடித்தார். அம்மா வுக்குத் தொல்லை என்று பலவாறும் சிந்தித் தாள். அப்படியே உறங்கி விட்டாள்.



ஒரு பூங்காவின் நடுவே தான் நிற்பதை அவள் உணர்ந்தாள். விழிகளை விரித்து நன்கு பார்த்தாள்.

ஆம். அது ஒரு அழகிய பூங்கா. வகை வகையான பூச்செடிகள். அதன் நடுவே நின்ற ஒரு மரம் அவள் கண்களைக் கவர்ந்தது.

அதன் அருகே ஓடிச்சென்று வியப்போடு பார்த்தாள். அவள் கண்களையே அவளால் நம்பமுடியவில்லை. மரத்தில் பூக்கள், காய் களுக்குப் பதிலாக பென்சில்கள். ரப்பர் கள். இவை அவ்வளவையும் பறித்து அப்பாவின் முன்பு அப்படியே கொட்டினால் அவரின் கோபம் தணியும் அல் லவா?

அவள் கண் களில் பெரிய கூடை தென்பட் டது. பென்சில் களையும்

ரப்பர்களையும் பறித்தாள். கூடை நிறைந்து விட்டது. கூடை கனமாக இருக்கும்போல தோன்றியது. அதை எப்படி தூக்கிச் செல்வது என்ற கேள்வியோடு நின்றபோது-

சிரிக்கும் சத்தம்.

'யார்? யாராக இருக்கும்.'

புரியாத இடம், அதிசய மரம். மர்மச் சிரிப்பு. அவனுக்குச் சற்றுப் பயம் ஏற்பட்டது. சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுக்கு அதிர்ச்சி.

இவ்வளவு உயரமான உருவத்தை அவன் பார்த்ததே இல்லை.

கைகளைக் கட்டிக்கொண்டு... மீண்டும் அந்தச் சிரிப்போடு... ஆனால் அந்தச் சிரிப்பில் ஒரு நட்பு! அன்பு!

சனோபருக்குத் தைரியம் வந்தது.

"நீ யார்? என்னைப் பார்த்து ஏன் சிரித்தாய்?" என்று கேட்டான்.

"நான் ஒரு தேவதை. உன்னைப் பார்த்தால் எனக்குப் பாவமாக இருந்தது. உதவி செய்யலாம் என்று வந்தேன்" என்றது.

"இந்தக் கூடையை வீடு வரை தூக்கிக் கொண்டு வர வேண்டும்" என்றாள்.

"ஓ... இவ்வளவுதானா. ஒரு நொடியில் தூக்கிக்கொண்டு வந்து விடுவேன். ஆனால்...." என்று இழுத்தது தேவதை.

"என்ன ஆனால்?" என்றாள் கேள்விக் குறியோடு.

"இந்தக் கூடையை உன் வீட்டிற்குக் கொண்டு சென்றால் மட்டும் உன் துன்பம் சரியாகி விடுமா? மீண்டும் ரப்பர்களையும் பென்சில்களையும் தொலைப்பாய். மீண்டும் உன் அப்பா கோபப்படுவார். நீ அழுவாய்" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தது தேவதை.

இவைகளெல்லாம் இந்த தேவதைக்கு எப்படி தெரியும்? சனோபருக்கு ஒரே வியப்பு.

"எனக்கு நீ என்ன செய்ய விரும்புகிறாய்?" என்றாள் சனோபர்.

தேவதை அவனை நோக்கித் தன் கையை நீட்டியது. கையில் ஒரு பூ! அழகிய பூ! இப்பொழுது பறித்த புதுப் பூவாய்... பனித் துளிகள் ஒட்டிக்கொண்டு...

"இந்தப் பூ உனக்குத்தான். இது மந்திரப் பூ. இது உனக்கு உதவி செய்யும்" என்றது தேவதை.

"எப்படி?" கண்கள் விரியக் கேட்டான் சனோபர்.

"உன் பென்சில்களும் ரப்பர்களும் இனி மேல் தொலைந்து போகாது. உனக்குத் தேவைப்படும்பொழுது பையைத் திறந்தால் போதும். உனக்கு வேண்டியது இருக்கும்."

"அப்படியா!" நன்றியோடு பார்த்தான்.

"ஆனால் ஒரு நிபந்தனை. எதுவும் சும்மா கிடைக்காது. ஒரு சிறு முயற்சியாவது செய்ய வேண்டும்" - தேவதை.

சனோபருக்குப் பதட்டம். "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"அதிகாலையில் நீ எழ வேண்டும். எழுந்தவுடன் இந்தப் பூவைத் தொட வேண்டும். உனக்கு உதவி செய்யும். அப்படி இன்றி அதிகாலையில் எழுந்து அதைத் தொட மறந்து விட்டால், அந்தப் பூ மறைந்து விடும். உனக்கு உதவி செய்யாது" என்று சொன்னது.

மறுநொடியில் அது நின்ற இடத்தில் ஒரே புகை மண்டலம். புகை அடங்கிய போது தேவதையைக் காணவில்லை.

திடுக்குற்றுக் கண் விழித்தான். பூங்கா இல்லை. பூச்செடிகள் இல்லை. தனது வீட்டில் தனது படுக்கையில்தான் இருக்கிறோம் என்று உணர்ந்தான். ஆனால்...

கையில் அந்தப் பூ!... மந்திரப்பூ!

அவனுக்கு ஒரே வியப்பு. தேவதை சொன்னது அவன் நினைவுக்கு வந்தது.

அதிகாலையில் எழ வேண்டும்.

மணி மூன்று. இன்னும் விடிவதற்கு நிறைய நேரம் உள்ளது. உறங்கினால் அவ்வளவுதான். காலை ஏழு மணிக்குத்தான் எழ முடியும்.

உறங்காமலே இருந்துவிட்டால் என்ன?

பூவைத் தலையணை அருகே வைத்துக்

"என்னடா ராமு சிலேட்டு முழுக்க முத்து... முத்துன்னு எழுதிக்கிட்டு வந்திருக்கே?"

"கையெழுத்து முத்து முத்தா இருக்கணும்னு நீங்கதானே சார் சொன்னீங்க!"

— ஒரியூர் கே. சேகர்





கொண்டு படுத்திருந்தான். அவன் மனதில் பரபரப்பு.

பொழுது விடியும் நேரம் வந்திருக்க வேண்டும். பக்கத்து வீட்டுச் சேவலின் கூவல். குயிலின் ஓசை. எழுந்தான் பூவைத் தொட்டான்.

பள்ளி செல்லத் தயாரானான். பையைத் திறந்தான். என்ன வியப்பு. பென்சில் ரப்பர் எல்லாம் ஒழுங்காக இருந்தன. பள்ளி சென்று பாடங்களை எழுதினான். நண்பர்களுக்கு இரவல் கொடுத்தான். பின்னர் அதைப் பற்றிக் கவலைப் படாது வீட்டிற்கு வந்தான். பையைப் பரிசோதித்தான்.

எல்லாம் சரியாக இருந்தன.

இனி அம்மாவுக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம்.

அவனுக்கு மகிழ்ச்சி.

இரவு வந்தது. தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பு அமர்ந்தான். அவனுக்குப்



"வாத்துகள் ஏன் ஒன்று பின்னால் ஒன்றாகப் போகின்றன?"
"தெரியலையே."
"அதான் 'Back, Back' என்று கத்தி கிட்டுப் போகுதே அதனாலதான்."
— கவிமணி செந்தில்

பிடித்தத் தொடர். அதில் மனம் ஈடுபட்டதால் சீக்கிரம் படுக்கச் செல்ல மறந்தாள். அதிகாலையில் எழ வேண்டும் என்பதையும் மறந்துவிட்டாள்.

"சனோபர் எழுந்திரு. பொழுது விடிந்து எவ்வளவு நேரம் ஆகுது. பள்ளிக்கூடம் போக வேண்டாமா?" என்று அம்மாவின் குரல்.

திடுக்கிட்டு எழுந்தாள் சனோபர்.

பூவைக் காணவில்லை.

யாருக்கும் தெரியாமல் அழுதாள்.

மீண்டும் ரப்பர்களும் பென்சில்களும் தொலைந்துபோக ஆரம்பித்தன. அம்மா வழக்கம்போல திட்டினாள்.

அந்த இரவு அவள் தூங்கவே இல்லை. அதே நினைவு. அதிகாலையில் எழுந்து கொண்டாள்.

அவள் கண்கள் பூவைத் தேடின. ஏமாந்தாள். இப்படி அடுத்த நாளும்... அடுத்த நாளும்...

ஊஹூம்.

பூ போனது போனதுதானே.

அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. உள்ளம் நிறையக் கவலை. கண்களில் ஏக்கம். உறங்கி விட்டாள்.

மீண்டும் அந்த மாயத் தோட்டம்.

நட்பான புன்னகையுடன் அந்த தேவதை.

ஆவலோடு அதன் அருகே ஓடினாள்.

"ஒருநாள் உறங்கிவிட்டேன். அதற்காக இப்படி என்னைத் தண்டிக்கலாமா? அந்த மந்திரப் பூவை மீண்டும் தா" என்று கெஞ்சினாள் சனோபர்.

"சிறுமியே, இனி உனக்கு அந்த மந்திரப் பூ தேவையில்லை. உனக்கு வேறொரு மந்திரப் பூவைப் பற்றிச் சொல்லித் தருகிறேன்" என்றது தேவதை சிரித்துக்கொண்டே.

"அப்படியா எங்கே சீக்கிரம் அந்தப் பூவைக் கொடு" என்று சனோபர் பரபரத்தாள்.

"அவசரப்படாதே. பொறுமையாகக் கேள். நானும் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். மூன்று நாட்களாய் நீ அதிகாலையில் எழுகிறாய். காலையில் நீ ஏழு மணிக்கு மேல் எழுவதே பெரிய அதிசயம். அதுவும் உன் அம்மா வந்து உன்னைப் பல முறை எழுப்ப வேண்டும். அப்படி இருக்க அதிகாலையில் எப்படி எழுந்தாய்? உன்னை யார் எழுப்பியது?" என்ற கேள்வியோடு தேவதை சற்று நிறுத்தியது.

சனோபர் யோசித்தாள். அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

"மீண்டும் அந்தப் பூ கிடைக்காதா என்ற கவலை உன் மனம் பூராவும் நிறைந்திருந்தது. கவலை நிறைந்த உன் மனம்தான் உன்னை எழுப்பியது. ஆக உன் மனம் ஒரு மந்திரப் பூ" என்று சொல்லிவிட்டு சனோபரை கூர்ந்து பார்த்தது.

"எனக்கு மறதி அதிகம் உள்ளது. அந்தப் பழக்கம் என்னை விட்டுப் போக வேண்டும். நினைவாற்றல் என்னிடம் பெருக வேண்டும். அதற்கு எனது மனம் எவ்விதம் உதவியாக இருக்கும்?" என்று கேட்டாள்.

"நல்ல கேள்வி கேட்டாய். அது நன்கு செயல்பட மூன்று நிபந்தனைகளை நீ நிறைவேற்ற வேண்டும். முதலாவதாக நீ மேற்கொள்ள விரும்பும் பழக்கம் நல்லதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக அப்பழக்கம் உன்னிடம் வர வேண்டும் என்ற கவலை உன்னிடம் ஏற்பட வேண்டும். மூன்றாவது அதற்காக முயற்சி செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டு மறைந்துவிட்டது தேவதை.

சனோபர் இப்பொழுது மிகவும் மாறிவிட்டாள். வகுப்பில் முதல் மாணவி. அப்பாவுக்கு அவர் அலுவல்களை நினைவு படுத்தும் செயலாளர்.

எல்லாம் அந்த மந்திரப்பூவின் மகிமைதான்!

அடுத்த இதழில்



கதை: ராஜி

படம்: லலிதா

ஆளப்பிறந்தவன்!

புதிய படக்கதை ஆரம்பம்

கிருஷ்ணர் வேடப் போட்டி

உங்கள் புகைப்படம் கோகுலம் அட்டையில் இடம் பெற வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருக்கிறதா? அப்படியென்றால் கிருஷ்ணர் வேடப் போட்டியில் கலந்துகொள்ளுங்கள். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கிருஷ்ணர் வேஷம் போட்டு வண்ணப் புகைப்படமாக (கலர் போட்டோ) எடுத்து கோகுலத்துக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் மிகச் சிறந்ததாகக் கருதும் ஒரு புகைப்படம் செப்டெம்பர் கோகுலம் அட்டையில் பிரசுரமாகும். மேலும் சிறந்த புகைப்படங்கள் இதழில் பிரசுரம் செய்யப்படும். பிரசுரமாகும் புகைப்படங்களுக்கு சன்மானமும் உண்டு. விரைவாக எங்களுக்கு அனுப்பி வையுங்கள். கடைசி தேதி 5.8.2000

— ஆசிரியர்



அம்மா... அம்மா...

நான் அருகில் உள்ள ஊருக்கு பஸ்ஸில் பயணித்தபோது பெண்மணி ஒருவர் 5 வயது சிறுவனுடன் ஏறினார். பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்ததால் அந்தப் பையனை நான் என் மடியில் வைத்துக் கொண்டேன். கூட்ட நெரிசலில் அவனது அம்மா சிறிது தூரம் பின்னால் சென்றுவிட அந்தப் பையன் ''அம்மா.. அம்மா..'' என்று அழ ஆரம்பித்தான். ''உன் அம்மா எங்கேயும் போய் விட மாட்டார்கள்'' என்றேன் நான். அதற்கு அவனோ, "அம்மா



எங்கேயும் போக மாட்டாங்க. நீங்க என்னை புடிச்சிக்கிட்டு எங்காவது போயிட்டா என்ன பண்றது?'' என்று கூறினானே பார்க்கலாம்! அவனது புத்திசாலித்தனத்தைப் பார்த்து ஆச்சர்யப் பட்டுப் போனேன்.

– ஆர். சுமதி,
நாமக்கல் மாவட்டம்

துண்டு!

எங்கள் வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு உண்டு. ஒருவர் மற்றவர் துண்டைப் பயன்படுத்துவது இல்லை. என் அம்மாவின் துண்டு கிழிந்துவிட்டதால், கிழிசலை வெட்டி நீக்கிவிட்டு இணைத்துத் தைத்திருந்தார்கள். அதனால் துண்டின் நீளம் குறைந்து விட்டது. தற்செயலாக அதைக் கவனித்த எங்கள் அப்பா, "அம்மா துண்டு ஏன் இப்படி இருக்கு?" என்று என்னைக் கேட்டார். அருகில் இருந்த என் தங்கை "அது அம்மா துண்டு மட்டும் இல்லை தம்மாத்துண்டு" என்றதும் எல்லோரும் சிரித்தோம்.




– துர்கா காத்யாயனி, பத்தாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.


அடையாளம்?

எதிர்வீட்டுக்காரரின் பெயர் ஜின்னா. ஒருநாள் அவர் தனியாக உறங்கிக் கொண்டிருக்கும்போது திருடன் வரும் சத்தம் கேட்டு விளக்கைப் போட்டுக் கத்தினார். நாங்கள் எழுந்து சென்று பார்த்தோம். அப்போது என் அப்பா "ஜின்னா நீ திருடனைப் பார்த்தாயா?" என்றார். அவரும் ஆமாம் என்றார். "அடையாளம் எதாவது சொல்லேன்" என்றார் என் அப்பா. ஜின்னா யோசனை செய்யும் போது என் தம்பி மப்ரூக் "திருடன் முடி கறுப்பாகவும் ரெண்டு

நாமும் குரங்காகப் பிறந்திருக்கலாம்!




கண், கால் கனோடதானே இருந்தான்" என்றான். சுற்றி நின்றவர்கள் அனைவரும் சிரித்தனர். "பெரியவர்கள் பேசும் போது நீயெல்லாம் பேசக் கூடாது" என்றார் அப்பா கோபத்துடன். அமைதியாக வீட்டிற்குள் சென்றான் தம்பி.



–அ.ஹாஜாநூருல்லா,
பன்னிரண்டாம் வகுப்பு, திருக்களாச்சேரி.

ஜாலியாக...

எங்கள் வீட்டுத் தோட்டத்திற்கு அடிக்கடி குரங்குகள் வருவது உண்டு. ஒரு நாள் இரண்டு குரங்குகள் மரத்தில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தன. இதைப் பார்த்த என் நண்பன் "நாமும் குரங்காகவே பிறந்திருக்கலாம்! எவ்வளவு ஜாலியா விளையாடுது" என்றான் பெருமூச்சு விட்டபடி. உடனே நான் "இப்ப மட்டும் உன்னை யார் மனிதன்னு சொன்னது? வால்




பையன்னுதானே கூப்பிடறோம்" என்றேன். அவனுக்கு வந்ததே கோபம்.

க. நடேசன்,
பெரியதச்சூர்.


கிளி எங்கே?

பக்கத்து ஊருக்குச் செல்வதற்காக நான், அம்மா, தங்கை பேருந்து நிலையத்தில் காத்திருந்தோம். என் தங்கை எப்போதும் மிகவும் கலகலப்பாகப் பேசக் கூடியவள். அவள் பேசுவதை அருகில் நின்றிருந்த பெண்மணி ரசித்துக் கொண்டிருந்தார். திடீரென அவர் என் தங்கையிடம் "இவ்வளவு சமர்த்தா பேசறியே, உன் காதில் போட்டிருக்கும் கிளிக் கூண்டில் கிளியைக் காணோமே" என்றார். திடுக்கிட்டு கிளிக் கூண்டு போன்ற தோடைத் தொட்டுப் பார்த்தாள் தங்கை. பிறகு சுதாரித்துக் கொண்டு "கிளி இப்பத்தான் இரை தேடப் பறந்து போச்சு" என்றாள். இதைக் கேட்ட அந்தப் பெண்மணி தங்கையின் சாமர்த்தியத்தைப் பாராட்டினார்.

– மு. ருக்மணி,
தேனி.




எங்கள் ஊரில் நடந்தது!




பகை ஏன்?

கதை: ப. கவிதா

படம்:




அப்பாடி! இனிமேல் காலையில் எழுந்து கூவுகிற வேலை கிடையாது.
எனக்கும் ஜாலி! எப்போதும் இருட்டு! உணவு தேடிச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம்!
அய்யோ என் கதி?
உனக்கு என்ன?
இரவெல்லாம் காவல் காத்துட்டு பகலில்தானே உணவு தேடணும்? பகலே வராதே!
சபாஷ்! இனி என் பாடு கொண்டாட்டம்! நாயார் பாடு திண்டாட்டம்! லாலா.. லா.. லாலா.. லா!
!



மறுநாள் காலை வழக்கம்போல் சூரியன் உதித்தது–
கொக்கரக்கோ கோ!
சே! இந்தக் கிளி எல்லாரையும் முட்டாளாக் கிடுச்சே!
என்ன பூனை யாரே..
கிளிப்பேச்சை நம்பி முட்டாளானீங்களா? ஹா.. ஹா.. லாலா லா... லாலா லா..!
அன்றிலிருந்து கிளியைப் பார்த்தால் பூனை அதைத் துரத்திக்கொண்டு ஓடும்!



* ஆப்பிரிக்கத் தேரை

வீட்டு வாசலில், தோட்டத்தில், கிணற்றில், குளத்தில், ஆறுகளில் என சர்வசாதாரணமாகக் காணப்படும் தவளைகளைப் பார்க்காதவர்களே இருக்க முடியாது. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்களில் தவளையும் ஒன்று. தேரையும் தவளை இனத்தைச் சேர்ந்ததுதான். உலகெங்கும் தவளைகள் ஆயிரக்கணக்கான இனங்களில் வாழ்கின்றன.

தவளையின் கண்கள் பெரியவை. அவற்றைக் கொண்டு தன் தலையைத் திருப்பாமலே நாற்புறமும் தவளையால் பார்க்க முடியும். ஏதாவது ஆபத்து என உணரும் போது கண்களை உள்ளே இழுத்துக் கொள்ளும்.



* மரத் தவளை

முன்னங்கால்கள் சிறியவை. நீண்ட உறுதியான பின்னங் கால்களின் உதவியால் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தவளை தத்தித் தத்திச் செல்கிறது.



* தேரை

எஸ். சுஜாதா





• ஜப்பான் தேரை



தத்திச் செல்லும் தவளை!

கால்களின் விரல் இடுக்குகளில் மெல்லிய தோல் இணைக்கப்பட்டிருப்பதால் நீரில் நீந்துவதற்கு வசதியாக உள்ளது.

குளம், குட்டைகளில் வாழும் பச்சைத் தவளை ரானா ஹெக்ஸடாக்ட்டிலா. உருவத்தில் பெரியதாக உள்ளது ரானாடைக்ரினா. உரத்த சத்தத்தோடு நீரின் மேல் தத்தித் தத்திச் செல்லும் வகை ரானாசயனோபிளிக்ட்டிஸ். இம் மூன்று இனங்களும் இந்தியாவில் அதிகமாக உள்ளன.

தவளை நுரையீரல், வாயின் உட்பகுதி மற்றும் மேல் தோல் ஆகியவற்றின் மூலம் சுவாசிக்கிறது. தண்ணீரில் மூழ்கியிருக்கும் போது மேல் தோலிலுள்ள மெல்லிய ரத்தக் குழாய்களால் நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜனை எடுத்துக் கொள்கிறது. ஆனால் இந்த





• தென் அமெரிக்கத் தவளைகள்


ஆக்ஸிஜன் அதற்குப் போதுமானதல்ல. ஆகவே அது நீருக்கு மேலே வந்து அடிக்கடி தலையை நீட்டி சுவாசிக்கும்.

மேல் தாடையில் மட்டும் தவளைகளுக்குச் சிறிய பற்கள் உண்டு.கீழ்த்தாடையில் கிடையாது. இந்தப் பற்களைக் கொண்டு இரையைக் கடிக்க இயலாது. இரை தப்பாமல் பிடித்துக் கொள்ள பற்கள் பயன்படுகின்றன. தேரைகளுக்குப் பற்கள் கிடையாது.

வளரும் புழு, நீந்தும் மீன் குஞ்சு, பறக்கும் பூச்சி, நகரும் சிலந்தி என இயங்கிக் கொண்டிருக்கும் உயிர்களை மட்டுமே தவளை உண்ணும். உயிர் இல்லாத பொருட்கள் அசைந்தால் அதையும் பிடித்து விடுவதுண்டு. இரையைக் கண்டதும் நாக்கை நீட்டிப் பிடிக்கும். நாக்கில் உள்ள பசையில் இரை ஒட்டிக் கொள்ளும். பூச்சி, புழு கிடைக்காத காலங்களில் பெரிய தவளை சிறு தவளைகளைப் பிடித்துத் தின்னும். தேரை ஒருநாளைக்கு 100 பூச்சிகளை உட்கொள்ளுமாம்!

நீர்ப்பறவைகளும் பாம்புகளும் தவளைக்குப் பகையானவை.

மழைக் காலங்களில் தவளைகள் உரத்த குரலில் ஒலி எழுப்புவதைக்கேட்டிருப்போம். தவளைகள் குடும்பம் நடத்துவதற்குத் தங்களது இணைகளை அழைக்கவே ஒலி எழுப்புகின்றன. இந்த ஒலியால் பகை விலங்குகள் சுலபமாக தவளையைப் பிடித்து விடுகின்றன. இதைத்தான் தவளை தன் வாயால் கெடும் என்கின்றனர்! பச்சை, பழுப்பு, கறுப்பு எனப் பலவித நிறங்களில் தவளைகள் காணப்படுகின்றன. இவற்றின் தோல் மென்மையாக இருக்கும். தேரையின் தோல் கடினமாகவும் சொரசொரப்பாகவும் காட்சி தரும்.



மிகச் சிறிய தவளை இரண்டரை செ.மீ. அளவுடையது. மிகப் பெரிய தவளை ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியில் வாழும் கோலியாத் தவளைதான்! இது 32 அங்குலம் நீளம் உடையது.

நீளம் தாண்டுவதில் தவளைகள் சாம்பியன்கள். ஒரு தவளை 17 அடி 4 அங்குலம் தாண்டி சாதனை படைத்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

தவளையின் வளர்ச்சியில் மூன்று நிலைகள் உள்ளன. அவை முட்டை, தலைப்பிரட்டை, வளர்ச்சியடைந்த தவளை.

பெண் தவளை நீர்பரப்பிற்குச் சென்று முட்டையிடும். ஒரு தடவைக்கு 20லிருந்து 8,000 முட்டைகள் வரை இடுகிறது. முட்டையைச் சுற்றிலும் வழுவழுப்பான பொருள் மூடிக் கொண்டிருக்கும். கருவுற்ற 4, 5 நாட்களில்



றும். இச் சமயத்தில் நீரின் மேற்பரப்பிற்கு வந்து காற்றை சுவாசிக்கும். முன்னங் கால்கள் உருவாகியவுடன் நீருக்கு வெளியே வந்து உட்காரும். தலைப் பிரட்டையாக இருக்கும் போதுள்ள வால், சிறிது சிறிதாகக் குறைந்து, உடலுக்குள் இழுத்துக் கொள்ளப்படும். இதற்கு மூன்று மாத காலம் ஆகும். சில இந்தியத் தவளை கள் ஒரு மாதத்தில் கூட உருமாற்றம் அடைந்து விடுகின்றன.

நிலத்தில் வசிக்கும் தேரையும் நீரில்தான் முட்டையிடும். சில தவளைகள் உடலின் மேற்புறம், வயிற்றுப் பகுதி போன்றவற்றில் முட்டை களை அடைகாப்ப துண்டு.

பொதுவாக நாற்பது ஆண்டுகள் வரை வாழக்கூடியவை தவளைகள். கஷ்டமான நிலைகளையும் தாங்கக்கூடியவை. கோடைக் காலங்களில் குளங்களில் நீர் வற்றி உலர்ந்து போய் விடும். அப்போது சேற்றுக்குள் தவளை கள் புதைந்து கொள்கின்றன. மழைக் காலம் வரும் வரை உறங்கிக் கொண்டே இருக்கும். இதற்கு வேனில் உறக்கம் என்று பெயர். மழை வந்து தண்ணீர் குளத்தில் தேங்கியதும் உறக்கத்தைக் கலைத்து வெளியே வருகின்றன.



முட்டையிலிருந்து தலைப் பிரட்டைகள் வெளிவரும். தலைப் பிரட்டைக்கு முதலில் வாய், கண்கள் உண்டாவ தில்லை. மூன்று ஜோடி புறச் செவுள்கள் மட்டும் இருக்கும். சிறிது காலம் சென்றதும் புறச் செவுள் கள் மறைந்து அகச் செவுள் கள் வளரும்.


இப்போது தலைப் பிரட்டை மீன் போன்ற நிலையை அடையும். நுரை யீரல் வளரத் தொடங்கிய பின்னால் கால்கள் தோன்

சாதாரணமாக தவளைகள் மென்மையானவையே. தேரைகளுக்கு ஒருவித நச்சுப் பொருள் உடலில் சுரந்து கொண்டேயிருக்கும். எதிரியிடமிருந்து தப்பித்துக் கொள்ள இத் திரவம் உதவுகிறது.

மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் நச்சு மிக்க ஒரு வகைத் தவளை இனம் உள்ளது. இத் தவளைகளைக் கடித்த பாம்புகளும் நாய்களும் இறந்து விடுகின்றனவாம்!

ஆப்பிரிக்கா, கிழக்கிந்தியத் தீவுகளில் மரங்களில் மட்டும் வாழும் தவளைகள் உள்ளன. மரத்தில் ஏறுவதற் கேற்ப அவற்றின் கால் விரல்கள் கூர்மையாகவும் பசை யுள்ளதாகவும் இருக்கும்.

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெறும் இரண்டாவது கதை



ஞாயிற்றுக் கிழமை.

ரவிசேகர், ராஜசேகர், சந்திரசேகர் - மூவரும் சகோதரர்கள். இவர்களில் கடைக்குட்டி சந்திரசேகர். செல்லமாக சந்துரு என்று அவனை அழைப்பார்கள். எல்லோருடைய பெயரிலும் 'சேகர்' என்று முடிவதால் 'சேகர் இல்லம்' என்று வீட்டிற்குப் பெயர் வைத்திருந்தார் அப்பா மனோகர்.

அன்று மூவரும் ஒன்று சேர்ந்திருந்தனர். தொலைக்காட்சிப் பெட்டியில் ஒவ்வொரு சேனலாக திருப்பிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது பக்கத்து வீட்டு அசோக் உள்ளே நுழைந்தான். ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது. 'டக்கென்று' மின்சாரம் நின்று விட்டது.

"அண்ணா! இப்பொழுது என்ன செய்யலாம்?"

"புதுமையா ஏதாச்சும் விளையாடலாமா?" சந்துரு கேட்டான்.

"ஓ! விளையாடலாமே..." என ரவிசேகர் சொல்லவும் எல்லோரும் சேர்ந்து கொண்டார்கள்.

அசோக் கடி ஜோக்ஸ் சொல்லுவதிலும் விடுகதை போடுவதிலும் மிகவும் கெட்டிக்காரன்.

"நான் இப்போ ஒரு விடுகதை சொல்லப் போறேன். யாராவது அதுக்கு விடை சொல்ல முடியுமா?" பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்துக் கேட்டான் அசோக்.


"நான் சொல்றேனே" ரவிசேகர் முந்திக் கொண்டான்.

"கடைசியிலிருந்து இப்போ ஆரம்பிப்போம். முதலில் சந்துருதான் சொல்லணும்."

அசோக் விளையாட்டை விடுகதை மூலம் ஆரம்பித்தான்.

"ஒரு கரண்டி மாவிலே ஊருக்கெல்லாம் தோசை. அது என்ன?"

சந்துருவுக்குப் புரியவில்லை. 'ஒரு



மனதை மாற்றிய விடுகதை!

க. இராமச்சந்திரன்

கரண்டி மாவிலே... ஒரு கரண்டி மாவிலே' திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அத்துடன் 'இது என்ன விளையாட்டு, புரியாத விளையாட்டு. தெரியவில்லை' என்று ஒதுங்கிக் கொண்டான்.

"ராஜசேகர், இப்போ நீ சொல்லு" என்றான் அசோக்.

அவனும் யோசித்தான். விடைபுரியாமல் தலையைத் திருப்பிச் சுவரைப் பார்த்தான். சுவரில் அழகான இயற்கைக் காட்சிப் படம் மாட்டப்பட்டிருந்தது. அதில் இருளின் இடையே வட்ட வடிவமான வெண்ணிலா பளிச்சென்று கண்ணில் தெரிந்தது.

"கண்டுபிடிச்சுட்டேன்... கண்டுபிடிச்சுட்டேன்..."

அனுமன் அசோகவனத்தில் சீதையைக் கண்டுபிடித்தது போலத் துள்ளிக் குதித்தான்.

'நிலா' என்று பதில் சொன்னான் ராஜசேகர்.

"சபாஷ்! சரியான விடை" அசோக் பாராட்டினான்.

'நிலா' என்று சொன்னதும், தோசை... நிலா இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தான் சந்துரு. கொஞ்சம் புரியத் தொடங்கியது.

ராஜசேகர்! இப்போ உனக்கான விடுகதை.

"ஒரு சாண் பையனுக்கு உடம்பெல்லாம் பல். அது என்ன?"

கொஞ்ச நேரம்தான் யோசித்தான்.

'சீப்பு' என்று பதில் சட்டென்று வந்தது.

''வெரிகுட்!'' - மீண்டும் பாராட்டினான் அசோக்.

இப்பொழுது சபை குதூகலம் அடையத் தொடங்கியது.

அப்போது, வீட்டிற்குள் நுழைந்தார் மனோகர்.

"அப்பா... அப்பா இங்கே வாங்கப்பா. ஒரு சின்ன விடுகதை போடுங்கப்பா"- ரவிசேகர் கெஞ்சினான்.

மறுக்க மனசில்லாமல் சின்னஞ்சிறு உலகத்தோடு சேர்ந்து கொண்டார்.

எந்த விடுகதையும் நினைவுக்கு வரவில்லை. புதிதாக ஒன்றை யோசித்துக் கொண்டு ஆரம்பித்தார்.

"சரி! இப்போ உங்களுக்காக விடுகதைகளைச் சொல்லிக் கொண்டே வருவேன். விடை தெரிந்தால் சொல்லுங்கள். எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே விடைதான். அதையும் கடைசியில்தான் சொல்வேன்" - புதிரோடு சொன்னார் மனோகர்.

எல்லோரும் மகிழ்ச்சியோடு தயாரானார்கள். சந்துரு மட்டும் வேண்டாவெறுப்போடு சேர்ந்து கொண்டான்.

"காணும் இடமெல்லாம் முள்ளாக இருப்பான். கால்களில் மட்டும் குத்தவே மாட்டான்- அவன் யார்?" என்று ஆரம்பித்து வைத்தார் மனோகர்.

குழம்பிப் போனார்கள். விடுகதையில் கெட்டிக்காரனான அசோக்குக்கும் புரியவில்லை.

"அடுத்து என்ன சொல்லுங்க பார்ப்போம்" அசோக் கேட்டான்.

"அண்ணனும் தம்பியும் இரண்டு பேர்
அவர்களைச் சுற்றிலும் பன்னிரண்டு பேர் - அவர்கள் யார்?"

எல்லோரும் சேர்ந்து கொண்டு மிரட்சியோடு பார்த்தார்கள்.

"போங்கப்பா... ஒண்ணுமே புரியமாட்டேங்குது. நல்லாப் புரியும்படியாச் சொல்லுங்கப்பா" - ரவிசேகர் கேட்டான்.

சந்துரு ஏதோ சிந்தித்தவாறு இருந்தான்.

"சரி! கொஞ்சம் விளக்கமாகச் சொல்றேன். இப்போதாவது புரியுதான்னு பாருங்க. நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே எல்லா விடுகதைகளுக்கும் ஒரே பதில்தான்னு'' மீண்டும் அவர்களைச் சமாதானப்படுத்திக் கொண்டு சொன்னார்.

"இரண்டு கால்கள் அவனுக்கு உண்டு.
ஒரு கால் நெட்டை, இன்னொரு கால் குட்டை. இப்போதாவது புரியுதா?"

ஒவ்வொருவரும் புரிவதாக லேசாகத் தலையாட்டினார்கள். "காணும் இடமெல்லாம் முள், அதுவும் காலில் குத்தாத முள்; அண்ணன் தம்பிகளைச் சுற்றி பன்னிரண்டு பேர்; ஒரு கால் நெட்டை, இன்னொரு கால் குட்டை. எல்லாத்தையும் சேர்த்து வைச்சுப் பாருங்க தெளிவாப் புரியும்" என்று கொஞ்சம் புதிரை விளக்கினார்.

யோசித்துக் கொண்டிருந்த சந்துரு பளிச்சென்று பதில் சொன்னான். "கடிகாரம்".

"ஆமாம்! கடிகாரம் கடிகாரம்" என்று மற்றவர்களும் குதித்தார்கள்.

அப்பாடா! ஒரு வகையில் விடுகதைக்கு விடை கிடைத்தது. இவர்களிடமிருந்தும் விடுதலை கிடைத்தது - மகிழ்ந்தார் மனோகர்.

'கடிகாரம்' என்று விடுகதைக்கு விடை கிடைத்ததும் ரவிசேகருக்கு ஏற்கெனவே அப்பாவிடம் கடிகாரம் கேட்ட ஞாபகம் வந்தது.


"அப்பா... எத்தனை தடவை ஒரு கடிகாரம் வாங்கிக் கொடுங்கப்பான்னு கேட்டிருப்பேன். அடுத்த மாசம் வாங்கித் தர்றேன். அடுத்த மாசம் வாங்கித் தர்றேன்னு ஏமாத்திக்கிட்டே இருக்கீங்க. எங்க வகுப்புல நிறைய பேர் கடிகாரம் கட்டியிருக்காங்க. கடிகாரம் இல்லாம நேரத்தை எப்படி தெரிஞ்சுக்கிறது? பாடங்களை எப்படி படிக்கிறது? வகுப்பு முடியறதை எப்படி பார்க்கிறது?" - கவலையோடு கேட்டான் ரவிசேகர்.

இப்பொழுதுதான் இவனுக்குப் புரிய

"ஏன் புழுதி மண்ணில் சண்டைக் காட்சிகளை எடுக்கிறார்கள்?"
"தூள் கிளப்ப வேண்டாமா?"
- எஸ். மோகன்



ஓவியப் போட்டி



ரயிலில் பயணம் செய்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: ரயில். நிற்கும் ரயிலோ, ஓடும் ரயிலோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஓவியம் வண்ணத்திலிருக்க வேண்டியது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி: **20.8.2000.**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

வைப்பதற்கு நல்ல வாய்ப்பு என்று நினைத்து ரவியைத் தன் பக்கத்தில் கூப்பிட்டார்.

"ரவி கவலைப்படாதே. நான் ஏமாத்திக்கிட்டிருக்கேன்னு நினைக்காதே. சீக்கிரம் உனக்குக் கடிகாரம் வாங்கித் தர்றேன். ஆனால், கடிகாரம் இல்லாமல் நேரத்தைத் தெரிஞ்சுக்க முடியாதுன்னு மட்டும் சொல்லக் கூடாது.

"தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் பெரிய அறிவியல் மேதை. அவர்தான் மின்சார பல்பைக் கண்டுபிடிச்சவர். அது மட்டுமல்ல. கடுமையா உழைச்சு பல புதுமையான கண்டுபிடிப்புகளை உருவாக்கியவர். அதனால அவருடைய புகழ் எல்லோருக்கும் தெரிஞ்சது. அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒரு அம்மா தன்னுடைய பையனைக் கூட்டிட்டு அவரிடத்தில் வந்தாங்க.

"ஐயா! என்னுடைய பையன் உங்களைப் போல சிறந்த அறிவியல் மேதையா வரணும்னு ஆசைப்படுறேன், அதுக்கு ஏதாச்சும் வழியிருந்தா சொல்லுங்கன்னு கேட்டாங்க... அப்போ தாமஸ் ஆல்வா எடிசன் சொன்னது இதுதான்:

"கடிகாரத்தைப் பார்க்காதே!

"புரியுதா? வாழ்க்கையில் உயர்வதற்கு வேறு ஒண்ணும் தேவையில்லை. நேரத்தைப் பார்க்காமல் உழைக்க வேண்டும். அதைத்தான் அவரு அப்படிச் சொன்னாரு" என்று நிறுத்தினார்.

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் ரவிசேகர்.

மீண்டும் தொடர்ந்தார் மனோகர்.


"அவர் மட்டுமில்லப்பா. இந்த உலகத்திலே கோடிக்கணக்கான ஏழைகள் இருக்காங்க. வெயிலிலும் மழையிலும் வயக்காட்டுல வேலை செய்யற விவசாயிகள், பாரம் சுமக்கிற கூலித் தொழிலாளிகள் இவங்களை மாதிரி இன்னும் நிறையப் பேரு. அவங்கள்லாம் கடிகாரம் கட்டிக்கிட்டா வேலை செய்யறாங்க? அவங்களுக்காகவே இந்தப் பூமி ஆகாயம் என்கிற அற்புதமான கடிகாரத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறது. அதிலே சுற்றி வரும் முட்கள்தான் சூரியனும் சந்திரனும். நாம செய்கிற வேலையில ஒன்றிப் போயாச்சின்னா நேரம் பார்க்கிறதுக்கே நேரம் இருக்காது."

மனோகரின் ஒவ்வொரு வார்த்தையும் ரவிசேகருக்குப் புதிய வெளிச்சத்தைக் காட்டின.


"அப்பா! இனிமேல் எனக்குக் கடிகாரம் வேண்டாம். விடுகதையில் ஏதோ புதிர் மறைஞ்சிருக்குன்னு மட்டும் நினைச்சேன். அதுக்குள்ள எவ்வளவோ 'புதையல்' இருக்குன்னு இப்போ புரிஞ்சுக்கிட்டேன். அந்த விடுகதைக்கு நன்றி; சொன்ன உங்களுக்கும் நன்றி" என்றான்.

சுற்றியிருந்த மற்றவர்களும் மகிழ்ந்தனர்.


முதல் பரிசு : டி. பிரதீபா,
பதினோராம் வகுப்பு, சென்னை.



ஜூன் மாத ஓவியப் போட்டியில் 'பூத்துக் குலுங்கும் மரம்' என்ற தலைப்பில் போட்டி



இரண்டாம் பரிசு : **என்.எஸ்.கோபால்,** பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, இராசாநகரம்
(கிழக்கு),திருவள்ளூர் மாவட்டம்.



ஓவியப் போட்டி முடிவுகள்





மூன்றாம் பரிசு : அ.சகிலா ராணி,
பதினோராம் வகுப்பு,
மேலமணியன் குழி, குமரி மாவட்டம்.

அறிவித்திருந்தோம். அதில்
பரிசு பெற்ற ஓவியங்கள்.



ஆறுதல் பரிசு : எஸ். பத்மநாபன்,
அரசினர் மேல் நிலைப்பள்ளி,
அம்மையார்குப்பம்.



ஆறுதல் பரிசு : ஆர். விவேக்ராஜ்,
பத்தாம் வகுப்பு, விருது நகர் இந்து நாடார்
மேல்நிலைப் பள்ளி, மதுரை.



மேகாவின் மெகா லட்சியம்!

15 வயது மேகா வகாரியா, டென்னிஸ் உலகை முற்றுகையிட்டிருக்கும் இளம் புயல். நடந்து முடிந்த ITF பெண்கள் மாஸ்டர்ஸ் டென்னிஸில் மேகா, இரட்டையர் போட்டியில் முதலாவதாகவும், ஒற்றையர் போட்டியில் இரண்டாவதாகவும் வந்து 500 டாலர்களையும் வென்று இருக்கிறார்.

மும்பையில் நடந்த கால் இறுதிப் போட்டியிலும் புனேவில் அரை இறுதிப் போட்டியிலும் முதலாவதாக வந்தவர், தில்லியில் நடந்த இறுதிப் போட்டியில் ஸோனல் ஃபட்கேஷிடம் தோல்வி அடைய நேர்ந்தது.

அவர் விளையாடும் இடக் கரத்தில் ஏற்பட்ட வீக்கம், அவரைக் கொஞ்சம் பாதித்து விட்டது. இன்னும் அதற்கென்று டாக்டரிடம் போய் வந்துகொண்டிருக்கிறார். ஆனாலும், 'ஸோனல் என்னைவிட நன்றாக ஆடக் கூடியவர்' என்று நேர்மையுடன் ஒப்புக் கொள்கிறார் மேகா.

மும்பையில் உள்ள அந்தேரி பகுதியில் வசிக்கிறார். மூன்று பெண்களடங்கிய குடும்பத்தில், இவர்தான் கடைக்குட்டி. மேகா பத்தாம் வகுப்பு முடித்திருக்கிறார். சைக்காலஜி படிக்க வேண்டும் என்று ஆசை! வீட்டில் இவரைத் தவிர வேறு யாரும் டென்னிஸ் பிரியர்கள் இல்லை;

"ஐந்தாவது வயதில் நான் இங்கே அந்தேரியிலேயே, எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் கிளப், அகாதமி எல்லாவற்றிலும் விளையாடிக் கொண்டிருப்பேன். அப்போது அங்கு டென்னிஸ் பயிற்றுவிப்பவர், என் அம்மாவிடம், 'உங்கள் பெண் எதிர்காலத்தில் பெரிய டென்னிஸ் ஸ்டாராக ஆவாள் பாருங்கள்; அவளுக்கு நல்ல கோச்சிங் கொடுங்கள்' என்று சொல்லிக்கொண்டிருப்பார். என் அம்மா, இது ஏதோ பணம் பறிக்கும் திட்டம் என்ற நினைப்பில், அவ்வளவாகக் கண்டு கொள்ளவில்லை. அப்படியும் கொஞ்சம் கொஞ்சமாக என் விளையாட்டில் மெருகேறுவது கண்டு, அவர்களாகவே எனக்கு நல்ல கோச்சிங் கொடுக்க முடிவெடுத்தார்கள்" என்றார்.

முதன் முதலாக வெளிநாடு சென்று விளையாடியது ஜகார்தாவிலாம். 16 வயதுக்குட்பட்டவருக்கான NEC யூத் கப் போட்டியில் நிறைய மலேசிய, இந்தோனேசிய வீராங்கனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்ததாம். அப்போது பெற்ற வெற்றி இவருக்கு நிறைய தன்னம்பிக்கையைத் தந்திருக்கிறது. அதனால்தான் "நம்மவர்களுடன் விளையாடும்போது, கொஞ்சமும் பயமேயில்லை" என்றார்.

வெளிநாடுகளில் உள்ளது போன்ற க்ளே கோர்ட்டுகளில் விளையாட ரொம்பவும் பிடிக்குமாம். இந்தியக் க்ளே கோர்ட்டுகள் காலை வாரி விட்டுவிடும் என்றார். அரசு தரப்பில் பிரத்யேக உதவி

என்று எதுவுமில்லாவிட்டாலும், தனியார் நிறுவனங்களும், விளையாட்டு துறை அமைப்புகளும் இலவச பயிற்சி அளித்து, நிறைய ஸ்பான்ஸர்ஷிப்பும் கொடுக்கிறதென்றார். ஏழாவது வயதிலேயே சின்னச் சின்ன மாட்சுகளை ஆட ஆரம்பித்து, பதினைந்து வயதில் வேகமாக முன்னேறி இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கும் மேகாவின் இறுதி இலக்கு விம்பிள்டன்தான்!

மனமிருந்தால் மார்க்கமுண்டு என நம்பும் இவருக்கு, ரோல் மாடல் ஸ்டெஃபி கிராஃப்.

"வெளிநாட்டு ட்ரெயினர்களெல்லாம் தங்கள் மாணவிகளை நன்றாக 'ட்ரில்' எடுத்து விடுவார்கள். இந்திய ட்ரெயினர்களுக்கு இளகிய மனசு; பெண்களை அப்படி எல்லாம் வாட்டி வதைக்க மாட்டார்கள்; ஆனால் நானே என்னிடம் கறாராக நடந்து கொள்ள முடிவு செய்திருக்கிறேன். அதாவது, கடுமையாக உழைக்கப் போகிறேன். அப்புறம் பாருங்கள்... எவ்வளவு 'பவர்ஃபுல்'லாக ஆகிறேன்" என்று சவால் விடுகிறார்.



"உண்மையில் டென்னிஸ் விளையாடுவதற்கு உடல் வலிமையுடன், ஓரளவு புத்திசாலித்தனமும் தேவைப்படுகிறது. இரண்டும் சம அளவில் இருந்தால் வெற்றி நிச்சயம்" என்னும் மேகாவிற்கு, கடவுள் நம்பிக்கையும் நிறைய இருக்கிறது.

மேகாவுக்கு டென்னிஸ் தவிர, கீ-போர்டில் ஏதாவது லைட்-ம்யூசிக் இசைத்துக் கொண்டிருக்கப் பிடிக்கும். எல்லோரையும் ஏதாவது ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து, அயராது உழைக்கச் சொல்கிறார்.

இவரும் இப்படியே உண்மையுடன் உழைத்தால், எதிர்காலத்தில் இந்த மேகத்தில் நட்சத்திரங்கள் ஜ்வலிக்காமலா போகும்?

— ஜெயஸ்ரீ ராஜ்

அட்டையில்: **மேகா**

கோகுலம் க்விஸ் முடிவு

ஜூன் மாதம் க்விஸ் போட்டியில் ஏழு பேரே சரியான விடைகளை அளித்து பரிசைப் பெறுகின்றனர்.

ரூபாய் இருபத்தி எட்டு பரிசு பெறுவோர்:-

1. வி. அர்விந்த், ஒன்பதாம் வகுப்பு, ஜெ. ஹெச்.எஸ்.எஸ். மெட்ரிக் பள்ளி, நெய்வேலி.
2. ப.விஜயபாரதி, நீர்விளங்குளம், புதுக்கோட்டை.
3. ஜி. ராஜசேகர், சிதம்பரம்.
4. க. அரவிந்த், வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்.
5. கோ. சோபன்பாபு, புதுக்கோட்டை.
6. ப. ராமகிருஷ்ணன், காயக்காடு.
7. மனிஷா, வடக்கன்குளம், நெல்லைமாவட்டம்.

சரியான விடை:

1. நீர் அருந்தாத விலங்கு கோலா கரடி.
2. உலகிலேயே பால் உற்பத்திக்குப் பெயர் பெற்ற நாடு டென்மார்க்.
3. நோபல் பரிசுகளை அதிகம் பெற்ற குடும்பம் மேரி கியூரி.
4. உலகிலேயே யானைகள் அதிகமுள்ள நாடு ஜிம்பாப்வே.
5. கொசுக்களே இல்லாத நாடு ஃபிரான்ஸ்.
6. ஆந்திராவின் தலைநகர் ஹைதராபாத்.
7. எலும்பு மற்றும் பல் வளர்ச்சிக்கு இன்றியமையாத நுண்ணூட்டச் சத்து கால்சியம்.
8. ஆக்டோபஸ் மெல்லுடலிகள் இனத்தைச் சேர்ந்தது.
9. கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்தவர் கோர்ட்னி வால்ஷ்.
10. சோடா பானத்தில் உள்ள வாயு கார்பன்-டை-ஆக்ஸைடு.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

21 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி
படம்: லலிதா




மேற்குப் பகுதியில்...
நீ பறவையாக மாறும்போது என்னைச் சுமந்து சென்று சுற்றிக் காண்பிக்கிறாயா?
இப்பவே மாறப் போறேன். ஏறிக்கொள்!
சிந்துபாத் பறவையாக மாறிய மனிதன் மீது அமர்ந்தான்.
ஆஹா! பறவை மீது அமர்ந்து பறப்பது சுவாரசியமாக இருக்கிறதே!
திடீரென பறவை இறக்கி விட்டு விட்டதே! ஏன்? எப்படி வீடு திரும்புவேன்?
சிறிது நேரத்தில் இருவர் வந்தனர்.
ஐயா, தாங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?
நாங்கள் அல்லாவின் தூதர்கள். இந்தச் செம்பொன் கழியை வைத்துக்கொள்.



சிந்துபாத் கழியுடன் நடந்தான். வழியில்—
ஆ..ஐ..
பாம்பு மனிதனை விட்டு விட்டு ஓடியது...
மெதுவா எழுந்து நட.
என் உயிரைக் காப்பாத்திட்டீங்க. நன்றி!
அதோ என்னைச் சுமந்து வந்தவன்!



ஏன் விட்டுச் சென்றாய்?
நாங்கள் இறை துதியை விரும்பாதவர்கள். நீ இறை துதி செய்ததால் விட்டுச் சென்றேன்.
இருவரையும் அழைத்துச் செல்கிறாயா?
ம்... ஏறுங்கள்.
சிந்துபாத் பத்திரமாகத் திரும்பினான்.
சொத்துகளை விற்று விட்டேன். பயணத்துக்குத் தயாராயிரு.
நான் தயார்.
சொந்த ஊருக்கு வந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.
(முற்றும்)

3. அழகனுக்கு என்ன ஆனது?

உணவு இடைவேளை முடிந்தது. அழகனின் பர்ஸுடன் மதிய வகுப்பிற்குத் திரும்பினான் செந்தில். மூன்றாவது வரிசையில் இருந்த அழகனை அணுகினான்.

அழகன், எவ்வளவு அழகு! அவ்வளவு அருகில் செந்தில் சென்றதில், அவன் நாக்கு உலர்ந்தது. ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்தார்.

செந்தில் அவசரமாக நெருங்கி "க்ளாஸ் முடிஞ்சதும் ... எ...எனக்காக வெயிட் பண்றியா?'' என்றான்.

அழகன் முகத்தில் கேள்விக்குறி. இருந்தும் சம்மதமாகத் தலையாட்டினான்.

வகுப்பு நடந்துகொண்டிருந்தது. செந்தில் தயக்கமுடன் திரும்பி அழகனைப் பார்த்தான். அழகன் கவனம் ஆசிரியர் மீதுதான் இருந்தது. அவன் முகம் சாதாரணமாகவே இருந்தது. பர்ஸ் தொலைந்த விஷயம் அவனுக்கு இன்னமும் தெரியவில்லை போலும்.

மாலை மணி ஒலித்ததும் வேகமாக வகுப்பு காலியாகியது. அழகன் இருக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. செந்தில் அவன் அருகே சென்றான். இருவரைத் தவிர வகுப்பில் எவருமில்லை.

"என்ன விஷயம்?'' என்று புருவத்தை உயர்த்திக் கேட்டான் அழகன்.

"உன் பர்ஸ்! கீழே கிடந்தது!'' என்று செந்தில் பர்ஸை அழகனிடம் கொடுத்தான்.

அழகன் பர்ஸைப் பிரித்தான். உள்ளே ரூபாய் நோட்டுகள் அப்படியே இருந்தன. போட்டோவும் இருந்தது. திருப்தியுடன் நிமிர்ந்தான்.

லேசாக அதிர்ந்தான் அழகன் எதிரே செந்தில் இல்லை! நன்றி சொல்லக்கூட அவகாசம் தராமல், எதற்காக அவ்வளவு அவசரமாக வெளியேற வேண்டும்? வியந்தபடி, அழகன் யோசிக்க ஆரம்பித்தான்.

அப்பா தியாகராஜன் பாக்டரியிலிருந்து திரும்பிய அரை மணிக்கெல்லாம் மீண்டும் கிளம்பத் தயாராகிவிட்டார்.

புது கவுனில் குட்டித் தங்கை. தம்பி பாஸ்கர் ஜீன்ஸ், டீ ஷர்ட்டில் பெருமிதமாக நின்றிருந்தான். மூவரிடமும் எவ்வளவு உல்லாசம்! எவ்வளவு மகிழ்ச்சி!

செந்திலை அவன் அப்பா அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. அழகற்ற செந்திலுடன் வெளியே செல்வதை அப்பா அவமானமாக உணர்வார். இருந்தும் அவனுக்குள் ஒரு நப்பாசை. இன்றாவது அவனை அழைத்துச் செல்ல மாட்டாரா? செந்திலின் நெடுநாள் ஆசையை நிறைவேற்றி வைக்க மாட்டாரா? தம்பி, தங்கையுடன் உல்லாசமாக ஊர் சுற்றும் சந்தோஷம் கிடைக்காதா? அப்பாவிடம் என்ன வெட்கம்? தைரியம் வரவழைத்துக்கொண்டு கேட்டான்.

"அப்பா...''

"என்ன?''

"வந்து... நானும் வரட்டுமா?''

"மோட்டார் பைக்கில் இடமில்லை!'' என்று சட்டென்று சொன்னார் அப்பா.

ஹூம்... அப்பாவின் மனதில்தான் இடமில்லை. செந்தில் வருத்தத்துடன்

அழகன், செந்தில்,


பத்மா ரவிசங்கர்

பெருமூச்சு விட்டான். அப்பாவைக் கட்டிப் பிடித்துச் சிறும் பைக்கில் செல்ல மிகவும் ஏங்கினான்.

செந்தில் வீட்டுக்குள் வந்தான். சமையலறையில் வேலையில் அம்மா. அவன் அறைக்குள் சென்றான்.

சுற்றிலும் பார்த்தான். ஓழே குழந்தையின் பொம்மைகள் இறைந்திருந்தன. அறையில் ஒரு புத்தக அலமாரி இருந்தது. ஒரு சேர், டேபிள் இருந்தது. சுவரில் இயற்கைக் காட்சி போஸ்டர் இருந்தது. அப்புறம்... அப்புறம்.... ஓரத்தில்...

அந்த ஆளுயர நிலைக்கண்ணாடி இருந்தது! பாழாய்ப் போன கண்ணாடி.



இதுதானே அழகானவர்களுக்குப் பெருமையையும் கர்வத்தையும் தருகிறது; அழகற்றவர்களுக்கு வருத்தத்தைத் தருகிறது... நிலைக் கண்ணாடிகளே இல்லாத உலகம் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று செந்திலின் மனம் நினைத்தது.

செந்தில் நின்றான். லேசாகத் தயங்கினான். மெல்ல நடந்தான். அந்தக் கண்ணாடி முன் நின்றான்!

செந்தில் இறுக்கமான முகத்துடன் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். 'என்னை ஏன் வெறுக்கிறாய்? என்னிடம் என்ன தவறு? சொல் செந்தில்! உள்ளதை உள்ளபடி உண்மையாகத்தானே பிரதிபலிக்கிறேன்...' என்று கண்ணாடி கேட்பதுபோல அவனுக்குத் தோன்றியது.

உண்மைதான்! உள்ளதைத்தானே பிரதிபலிக்கிறாய்! இதோ, எதிரே, அதே கருத்த உருவத்தில், முன் துருத்தும் பற்களுடன், மாறு கண்ணில், அகன்ற மூக்கில் –

செந்தில்!

சற்றும் அழகற்ற செந்தில்! வீட்டில் அம்மா, அப்பா, தம்பி, தங்கை என அனைவரும் நல்ல நிறமாக, களையாக, அழகாக இருக்க –

எப்படி தப்பிப் பிறந்தேன் நான்! எப்படி இது சாத்தியம்? எந்தத் தலைமுறையில் எந்தத் தாத்தாவின் உருவம் எனக்கு வாய்த்துள்ளது? பாவம். அவர் மனமும் என்ன பாடுபட்டதோ? சே! இருக்காது. பண்டைய காலங்களில் மனிதர்கள் மோசமில்லை. எல்லோருக்கும் கள்ளமில்லாத வெள்ளை உள்ளம்.

அன்று இரவு. செந்தில் பைக்கில் சென்றான். தம்பியுடன் விளையாடினான். அப்பாவின் மடியில் கொஞ்சினான். நடந்தது எல்லாம் வரிசையாக வந்த கனவில்தான்!

மறுநாள். மதியம் அரைவேளை விடுமுறை அறிவித்தார்கள். ஓய்வு பெறும் ஆசிரியர் ஒருவருக்குப் பிரிவு உபசார விழாவாம். எதிர்பாராத அரை நாள் லீவில், மாணவர்கள் முகத்தில் உற்சாக மின்சாரம். எல்லோருக்கும் விளையாட இடம் இருக்கிறது; நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் செந்திலுக்குத்தான் எவருமில்லை.

மதியம், மலைக்குச் செல்வது என முடிவெடுத்தான் செந்தில்.

காலை வகுப்புகள் வேகமாக கழிந்தன. வகுப்பில் அழகன் இல்லாததைக் கவனித்தான் செந்தில். சேர்ந்த இரண்டாம் நாளே, அழகன் எதற்காக லீவு எடுத்திருப்பான்?

வீட்டில், மதிய உணவு சாப்பிட்டு முடித்தான் செந்தில். தெருவில் கிரிக்கெட் ஆட்டம் துவங்கி விட்டிருந்தது. குமரனுடன் புறப்பட்டான் செந்தில்.


மலையை நோக்கி நடந்தான். தொலைவில் பச்சைப் பசேலென்று எழுந்துள்ள மலையைப் பார்க்கையில் செந்தில் பரவசமானான். மலைதான் எவ்வளவு அழகு! எவ்வளவு பிரம்மாண்டம்! ஈடு இணை இல்லாத சொர்க்கப் பிரதேசம் அது! தனக்காகவே அந்த மலை அங்கே உள்ளதோ என்று அவனுக்குத் தோன்றியது.

"குமரா! உனக்கும் இந்த மலை பிடிக்கும்தானே?"

"வள்!" என்று குமரன் உற்சாகமுடன் ஒருமுறை குரைத்துவிட்டு, அவனைப் பார்த்து வாலாட்டியது.

ஆனால் குமரனின் மகிழ்ச்சிக்குக் காரணம் மலை அல்ல; தன் தோழமைதான் என்பது செந்திலுக்குத் தெரியும். பெருமிதமுடன் குமரனைத் தடவிக் கொடுத்தான்.

மலை ஏற்றம்



தொடங்கியது. வழியில் ஓரிரு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் தென்பட்டனர். பொதுவாக, அவர்கள் உச்சிக்கு வருவது இல்லை. மலையின் கீழ்ப் பகுதிகளில் மேய விட்டு விடுவார்கள்.

அந்தச் சிறுவர்களைப் பார்த்துக் குமரன் குரைக்காததைச் செந்தில் கவனித்தான். குமரனுக்கு அபார அறிவு. ஒருபோதும் அனாவசியமாக குரைப்பதில்லை.

உச்சிப் பகுதி. எப்போதும் போல் ரம்யமாகவே இருந்தது. நிழல் தரும் தாவரங்கள். நீல வானம். உறுத்தாத சூரியன். உல்லாசமூட்டும் காற்று.

செந்தில் உற்றுக் கவனித்தான். எந்தச் சத்தமும் கேட்கவில்லை. எவரும் நடமாடவில்லை என்பது உறுதியானது. நிதானமாக நடந்தான். உடன் குமரன்.

கால்மணி நேரம் நடந்ததும் அந்தப் பாறைப் பொந்து தென்பட்டது.


செந்தில் சுற்றிலும் எச்சரிக்கையுடன் பார்த்தான். அந்தப் பிரதேசம் மகா மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. பொந்தை நெருங்கி உள்ளே பார்த்தான்.

அன்று பார்த்த அந்த பளபள கத்தி இன்னமும் அங்கேயேதான் இருந்தது! இந்தக் கூரிய கத்தி எப்போது வெளியே எடுக்கப்படுமோ? எவருக்கு ஆபத்து புரியக் காத்திருக்கிறதோ? அதற்குள்... அதற்குள் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்துத் தடுக்க வேண்டும்.

குமரன் சுறுசுறுப்பாக மோப்பம் பிடித்துக்கொண்டிருந்தது.

சிறிது தூரத்தில், தரையிலிருந்து குமரன் எதையோ வாயினால் கவ்வுவதைக் கவனித்தான். உற்சாகப் பாய்ச்சலுடன் திரும்பி வந்த நாய், கவ்வியிருந்த பொருளை செந்தில் காலடியில் போட்டது. குனிந்து அதைக் கையிலெடுத்துப் பார்த்தான்.

அது ஒரு சுருட்டு! பாதி புகைக்கப்பட்டு விட்டிருந்தது. பழுப்பு





"ஒண்ணும் ஒண்ணும் இரண்டு. இரண்டும் இரண்டும் நாலு. நாலும் நாலும் சேர்ந்தா எவ்வளவு?"

"அம்மா! சுலபமான பதிலெல்லாம் நீங்க சொல்லிட்டு கஷ்டமானது மட்டும் என்னைக் கேட்கறீங்களே?"

— வெங்கடேஸ்வரா

• •

நிறத்திலிருந்தது. சுருட்டின் முனைக்கு அருகே தங்கச் சரிகை நூல் சுற்றப்பட்டிருந்தது வித்தியாசமாக இருந்தது.

முதலில் அந்தக் கத்தி. அடுத்து இந்த சுருட்டுத் தடயம். சதிகாரனை மெல்ல நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று உற்சாகமானான் செந்தில்.

அடுத்தநாள். முதல் வகுப்பு தமிழ்.

"நேற்று ஏன் அழகன் வரலை?" என்று தமிழாசிரியர் கேட்டார்.

அழகன் எழுந்திருந்து, "அம்மாவுக்கு உடம்பு சரியில்லை சார்!" என்று பதில் சொன்னான்.

"சரி. உட்கார். இன்றைய பாடம் நட்பு!" என்று துவங்கினார். "உலகிலேயே உயர்ந்த விஷயம் நட்பு. எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இருப்பது நட்பு. ஜாதி, அந்தஸ்து என்று எந்த வித்தியாசமும் நட்பு பாராட்டாது. நல்ல நட்பு கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்."

மிக்க வருத்தமுடன் செந்தில் கேட்டுக் கொண்டிருந்தான். நல்ல நட்புக்கு அவன் எங்கே செல்வான்? இந்த ஜன்மத்தில் அந்தப் பாக்கியம் தனக்குக் கிட்டப் போவதில்லை...

மாலை வகுப்பு காலியாகி விட்டிருந்தது. செந்தில் தனியாக ஹோம் வொர்க் செய்து கொண்டிருந்தான்.

பள்ளி முடிந்து ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். ஹோம் ஒர்க்கை முடித்து விட்டு எழுந்து கொண்டான். வீடு திரும்ப இன்னமும் மூடு வரவில்லை. கால்போன போக்கில் நடந்து சென்றான்.

விளையாட்டு மைதானத்தை அடைந்தான். பொழுது சாயத் தொடங்கியிருந்தது. எல்லோரும் வீட்டுக்குச் சென்றுவிட, அழகன் மட்டும் தனியாக கூடைப் பந்து விளையாட்டுப் பயிற்சி செய்துகொண்டிருப்பதை செந்தில் கவனித்தான்.

பொழுது சாய்ந்ததும் அழகன் தனியனாகத் தீவிரப் பயிற்சி செய்கிறான். அவனுக்கு விளையாட்டில் அவ்வளவு ஆர்வம் போலும்.

அழகனுக்கு இயற்கையிலேயே மிகவும் சிவந்த நிறம். அதுவும் மாலையின் மஞ்சள் வெய்யிலில் அழகன் தங்கமாக தகதகத்ததை செந்தில் வாய் பிளந்து பார்த்தான்.

அழகன், மிகவும் அழகன்தான்! அழகனிடம் அளவுக்கு அதிகமாக அழகு இருக்கிறது; மிதமிஞ்சிய செல்வம் இருக்கிறது; அபார விளையாட்டுத் திறமை இருக்கிறது. எதுவும் குறைவு இல்லாமல் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறான் இறைவன். ஆனால் -

தன்னை அழகனுக்கு இப்படி எதிர்ப்பதமாக அல்லவா படைத்துவிட்டான் இறைவன்! செந்தில் மனதுக்குள் புலம்பினான். இறைவா, உன் படைப்பில் ஏன் இந்த ஓர வஞ்சனை?

வெளிச்சம் மங்கிக் கொண்டிருந்தது. விளையாட்டை முடித்துக்கொண்ட அழகன் பள்ளிக் கட்டடங்களை நோக்கி நடந்தான். செந்திலை அவன் கவனிக்கவில்லை.

செந்திலும் கிளம்பினான்.

மரங்கள் மறைவில் இருந்தது டாய்லெட். அங்கே சென்ற செந்தில் அதிர்ச்சி அடைந்தான்.

டாய்லெட் வாசலில் தரையில் மயக்கமாகக் கிடந்தான் அழகன்!

(தொடரும்)



Parry's
Lacto King
ஜம்பி விட்டமின்களுடன்
Parry's
Lacto King
WITH VITAMINS
அடக்க முடியாத உற்சாகம்!

கேட்கட்டுமா டாக்டர்?

● எம்.கே. நாகலெட்சுமி, விக்கிரமசிங்கபுரம்.

? 'எண்டோக்ரோனாலஜி' என்றால் என்ன, டாக்டர்?

! நம் உடலில் இரண்டு வகைச் சுரப்பிகள் உள்ளன. ஒன்று, நாளமுள்ள சுரப்பிகள் (Exocrine Glands). மற்றொன்று, நாளமில்லாச் சுரப்பிகள் (Endocrine Glands). நாளமுள்ள சுரப்பிகள் சுரக்கும் நீர்களுக்கு 'நொதிகள்' (Enzymes) என்று பெயர். நாளமில்லாச் சுரப்பிகள் சுரக்கின்ற நீர்களுக்கு 'இயக்குநீர்கள்' (Hormones) என்று பெயர். நொதிகள் ரத்தத்தில் கலப்பதற்குத் தனி நாளங்கள் உள்ளன. ஆகவேதான் அவற்றுக்கு நாள



முள்ள சுரப்பிகள் என்று பெயர் வந்தது. ஆனால், இயக்குநீர்கள் ரத்தத்தில் கலப்பதற்குத் தனி நாளங்கள் இல்லை; இவை நேரடியாக ரத்தத்தில் கலந்து விடும்; அங்கிருந்து உடலில் தேவைப்படும் உறுப்பு அல்லது பாகத்திற்குச் சென்றடையும். நம் உடலில் உள்ள முக்கிமான நாளமில்லாச் சுரப்பிகள் பின்வருமாறு: 1. பிட்யூட்டரி சுரப்பி, 2. தைராய்டு சுரப்பி, 3. அட்ரீனல் சுரப்பி, 4. லாங்கர்ஹான் திட்டுகள், 5. பாலியல் சுரப்பி. இவற்றில் பிட்யூட்டரி சுரப்பி மூளையின் அடிப்பாகத்தில் உள்ளது. இது இரண்டு பாகங்களைக் கொண்டது. முன்பாகம் சுரக்கும் இயக்குநீர் உடலின் சீரான வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. பின்பாகம் சுரக்கின்ற இயக்குநீர்கள் உடல் வெப்பம், ரத்த அழுத்தம், நீரின் அளவு, கொழுப்பு அளவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. தைராய்டு சுரப்பி கழுத்தின் முன்புறம் அமைந்துள்ளது. இது 'தைராக்சின்' என்ற இயக்குநீரைச் சுரக்கிறது. உடலின் வளர்ச்சி, உயரம், உருப்பெருக்கம், வளர்சிதை மாற்றம் ஆகியவற்றைக் கண்காணிக்கிறது. அட்ரீனல் சுரப்பிகள் சிறுநீரகங்களின் மேல் ஒரு தொப்பி போல அமர்ந்துள்ளன. இவை சுரக்கும் இயக்குநீர்கள் நாம் பயப்படும் போதும், கோபப்படும் போதும், உணர்ச்சிவசப்படும்போதும் உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கட்டுப்படுத்துகின்றன. கணையத்தில் உள்ள லாங்கர்ஹான் திட்டுகள் இன்சுலின் என்னும் இயக்குநீரைச் சுரக்கின்றன. இது நம் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. பாலியல் சுரப்பிகள் ஆண் தன்மை, பெண் தன்மை, குரல் இனிமை, குழந்தைப் பிறப்பு, பால் சுரப்பு போன்ற பல பணிகளைக் கவனிக்கின்றன. இது பற்றிய படிப்பிற்கு எண்டோக்ரோனாலஜி என்று பெயர்.

● அசாருதீன், கூத்தாநல்லூர்.

? டாக்டர், வாக்மேன் கேட்பதால் காதுகளுக்கு ஆபத்து ஏற்படுமா?

! இல்லை. காதில் உள்ள செவிப்பறைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வாக்மேனின் ஒலி அளவை சரியான அளவில் வைத்துக் கொண்டால் காதுகளுக்கு ஆபத்து ஏற்படாது.

● ஜி.ஜி.கிருஷ்ணன், விசலூர்.

? குளிர்பானங்களை அதிகம் அருந்துவது உடல் நலத்திற்குக் கேடானதா டாக்டர்? இதனால் பற்கள் பாதிக்கப்படுமா?

! அளவுக்கு அதிகமான குளிர்பானங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லதில்லை. குறிப்பாக, தொண்டையில் அழற்சி, புண், டான்சில் வீக்கம், காற்றறை அழற்சி, ஒவ்வாமை, மூச்சுக் குழாய் அழற்சி போன்ற பல நோய்கள் வருவதற்கு அதிக வாய்ப்புள்ளன. குளிர்பானங்கள் பற்களையும் பாதிக்கக்கூடியவையே. பல்லின் எனாமல் என்கிற வெளிப்பூச்சு விரைவிலேயே கரைந்து விடும். சொத்தைப் பல்

உண்டாகும். ஏற்கெனவே சொத்தைப் பல் இருந்தால், அதன் தீவிரம் அதிகமாகி பல்லை அகற்ற வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படும். ஆகையால், குளிர்பானங்களை அள வோடு குடியுங்கள்.

● **ஸ்டீவ்.எம். எலியட், கும்மிடிப்பூண்டி.**

? என் அம்மாவுக்குக் கட்டை விரலில் மீன் முள் குத்திப் புண்ணாகி விட்டது. இதைக் குணப்படுத்த ஒரு வழி சொல்லுங்கள், டாக்டர்!

! மீன் முள் குத்திய இடத்தில் முள் உள்ளே உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும். முள் இருந்தால் அதை வெளியேற்ற வேண்டும். டெட்டனஸ் டாக்சாய்டு (Tetanus Toxoid) என்னும் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். மருத்துவரின் மேற்பார்வையில் தினமும் புண்ணுக்கு மருந்துத் துணியைக் கட்ட வேண்டும். தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மாத்திரைகள், வலி நிவாரணிகள் மற்றும் வைட்டமின் பி-காம்ப்ளெக்ஸ் மாத்திரை சாப்பிட வேண்டும். புண் குணமாகும் வரை விரலைத் தண்ணீரில் நனையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புண் விரைவில் குணமாக, உன் அம்மாவுக்குச் சர்க்கரை வியாதி உண்டா, இல்லையா என்பதைப் பரிசோதித்து, அதற்கேற்ப சிகிச்சையைத் தொடர வேண்டும்.



முடக்குவாதம் எதனால் வருகிறது?

● **அ. ஜோசப், சென்னை – 75.**

? முடக்குவாதம் எதனால் வருகிறது? அது தாக்குவது மூட்டுகளை மட்டுமா? நரம்புகளையும் தாக்குமா?

! முடக்குவாதம் (Osteo Arthritis) மூட்டுகளை மட்டுமே தாக்கக்கூடியது; நரம்புகளை அல்ல! நம் மூட்டுகளில் 'கொலாஜன்' (Collagen) என்னும் ஒருவிதப் புரதப் பொருள் உள்ளது. கை, கால் மூட்டு எலும்புகளை அசைக்கும் போது அவை ஒன்றோடொன்று உராய்வதைத் தடுப்பதற்குப் பஞ்சு போன்ற ஒரு திசுப் பொருள் மூட்டுகளில் அமைந்துள்ளது. இந்தத் திசுப்பொருளை வலுப்படுத்துவது கொலாஜன் என்னும் புரதப் பொருளே. வயதாகும் போது மூப்பு காரணமாகவோ, சில நோய்க் கிருமிகளின் பாதிப்பினாலோ கொலாஜன் சுரப்பது குறைகிறது. இதனால் இந்தத் திசுப் பொருள் வலுவிழக்கிறது. அப்போது முடக்குவாத நோய் துவங்குகிறது. நோய் கடுமையாகும் போது திசுப்பொருள் அறவே அழிந்து போகிறது. இதன் விளைவால், மூட்டுகள் அசையும்போது ஒன்றோடொன்று உராய்ந்து கடுமையான வலியை ஏற்படுத்தும். மூட்டுகளை அசைப்பது கடினமாக இருக்கும்; எழுந்திருப்பதில், நடப்பதில், உட்காருவதில் சிரமங்கள் தோன்றும்; மூட்டுகள் வீங்கிக் கொள்ளும். ஆரம்ப நிலையில் உள்ள முடக்குவாத நோய்க்கு வலி நிவாரணிகளும் வீக்கத்தைக் குறைக்கும் மருந்துகளும் பயன்படும். உடற்பயிற்சி மற்றும் வெப்பப் பயிற்சி மூலமும் இதனைக் குணப்படுத்தலாம். ஆனால் மிகக் கடுமையான முடக்குவாத நோய்க்கு செயற்கை மூட்டுகள் பொருத்திச் சிகிச்சை செய்ய வேண்டும்.

டாக்டர். கு. கணேசன்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெறும் இரண்டாவது கவிதை

குழந்தையும் தெய்வமும்

எங்கள் வீட்டுப் பாப்பாவை
தங்கம் என்பாள் பாட்டிதான்!
தாத்தா மடியில் தவழ்கையிலே
தாரிணி என்றே பெயர் சொல்வார்!

மாமா வருகிற போதெல்லாம்
மஞ்சு என்றே கொஞ்சிடுவார்!
அத்தை மட்டும் அவள்பெயரை
அமுதா எனவே அழைத்திடுவார்!

அம்மா அன்பாய் அணைத்தபடி
அல்லி என்று கூப்பிடுவார்!
அப்பா அவளை எப்போதும்
அரசி என்றே குலவிடுவார்!

எந்தப் பெயரில் அழைத்தாலும்
எங்கள் பாப்பா ஒன்றேதான்!
எத்தனைப் பெயரில் அழைத்தாலும்
அத்தனைத் தெய்வமும் ஒன்றேதான்!

-எஸ். குமாரகிருஷ்ணன்,
புதுச்சேரி.





தென்னிந்தியாவின் ஆக்ஸ்ஃபோர்டு!

* தாமிரபரணி ஆறு

'**கோ**தை பிறந்த ஊர் கோவிந்தன் வாழும் ஊர்' என்ற சிறப்புடையது 'திருவில்லிபுத்தூர்'. விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது. எங்கள் ஊரை முன்பு 'வில்லி' என்ற மன்னர் ஆண்டுவந்தார். ஆதலால் 'வில்லிபுத்தூர்' எனப் பெயர் பெற்றது. இந்த ஊரில் திருஆண்டாள் அவதரித்ததனால் 'திருவில்லிபுத்தூர்' என அழைக்கப்படுகிறது. இந்த ஆண்டாள் கோயில் மிகவும் புகழ் வாய்ந்த கோயில். தமிழ்நாட்டிலேயே இதன் கோபுரம் தான் உயரமானது. இக் கோபுரம் தமிழ்நாடு அரசின் முத்திரைச் சின்னம்.

இக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் சமீபத்தில் நடைபெற்று இருப்பதால் கோயில் புதுப் பொலிவுடன் விளங்குகிறது. இக்கோயிலிலுள்ள சிலைகள் அனைத்திற்கும் வர்ணங்கள் பூசப்பட்டு மிக அழகாக கண்களைக் கவரும் வகையில் உள்ளன. கோயில் வெளிப் பிரகாரத்தில் கண்ணாடி மாளிகை ஒன்றுள்ளது. இங்கு திருஆண்டாள் அவதரித்த இடமுள்ளது. ஆண்டவனையே தன் மணாளனாக அடைய வேண்டியே திருப்பாவையை மார்கழி மாதத்தில் முப்பது நாட்களும் பாடி, அவரையே கைபிடித்தார். இங்குள்ள மற்றொரு சிறப்புவாய்ந்த கோயில் 'வைத்தியநாத சுவாமி' திருக்கோவில். இது ஊரின் தென்பகுதியிலுள்ளது.

எங்கள் ஊருக்கு தென்மேற்கிலும் வடக்கிலும் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர் உள்ளது. காயக்குடியாறு என்னும் ஆறு தென்மேற்கே அழகாபுரிச்சோலையிலே தோன்றுகிறது.

இம்மலைத் தொடரில் 'முதலியார் ஊற்று', 'அத்தித் துண்டு', 'காட்டழகர் கோயில்', நீராத்திலிங்க ஐயனார் கோயில்'



* ஆண்டாள்

முதலிய இடங்கள் பார்க்கத்தக்க சிறப்பு வாய்ந்தவை. செண்பகத் தோப்பு என்ற பெரிய சோலையொன்று மலையடியில் இருக்கிறது. இங்கு வனவிலங்கு சரணாலயம் ஒன்று உள்ளது. கல்வி வளர்ச்சிக்குரிய எல்லா வசதிகளோடும் எங்கள் ஊர் மிளிர்கின்றது.

இங்கு வேளாண்மையும் துணி நெசவு செய்யும் தொழிலுமே அதிகம். கோதை பிறந்த ஊரான எங்கள் ஊருக்கு ஒருமுறை வாருங்கள்! ஒருமுறை வந்தால் மீண்டும் மீண்டும் வரத்தோன்றும் சிறப்புடையது திருவில்லிபுத்தூர்.

- நா. வைசாலி

ஒன்பதாம் வகுப்பு, திரு இருதய பெண்கள் மேல் நிலைப் பள்ளி, திருவில்லிபுத்தூர்.

எங்கள் ஊர் - பாளையங்கோட்டை. தென்னிந்தியாவின் ஆக்ஸ்ஃபோர்டு எது என்று தெரியுமா? கல்வி நிலையங்கள் மிகுதியாக இருப்பதால் எங்கள் ஊரான பாளையங்கோட்டைக்குத் தான் இந்தச் சிறப்புப் பெயர். ஹைதராபாத், செகந்தராபாத் போல திருநெல்வேலியும் பாளையங்கோட்டையும் இரட்டை நகரங்கள். அதைப் போலவே இங்கும் ஒரு ஆறுதான் இரு நகரங்களையும் பிரிக்கிறது. அது தாமிர பரணி ஆறு. பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், ஏராளமான மேல்நிலைப் பள்ளிகள் என கல்வி வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் திருநெல்வேலியை விட பாளையங்கோட்டைக்கு மவுசு அதிகம். அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும்விதமாக கொக்கிரகுளம் பகுதியில் மாவட்ட அறிவியல் மையம் அமைந்துள்ளது.


பத்து நாட்கள் கொண்டாடப்படும் தசரா பண்டிகை மைசூருக்கு அடுத்த படியாக எங்கள் ஊரில்தான் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தசராவின் போது ஊர் முழுவதும் சப்பர பவனி, கச்சேரிகள் என இரவும் பகலும் களைகட்டி இருக்கும். பத்தாம் நாளான விஜயதசமி அன்று ஆயிரத்தம்பாள் தொடங்கி பேராத்து செல்வி வரை அனைத்து அம்மன்களும் ஒரு சேர வருவது கண் கொள்ளாக் காட்சி. இதைப் பார்ப்பதற்காக சுற்றுப் புறக் கிராமங்களிலிருந்து மக்கள் பெருவாரியாக திரண்டு வருவார்கள். பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்து பத்தாம் நாள் திருவிழாவைச் சிறப்பிப்பது சமூக ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

திரிபுராந்தீஸ்வரர் கோயில், கோபால சுவாமி கோயில், புனித அந்தோணியார் கோயில், மசூதி என சர்வ சமயத் தலங்களும் அடுத்தடுத்து அமைந்து ஊருக்கு அழகு சேர்க்கின்றன.

எல்லா வித விளையாட்டுகளும் உடற் பயிற்சிகளும் செய்வதற்கு ஏற்ற வகையில் 'வ.உ.சிதம்பரனார்' மைதானம் பரந்து விரிந்து அமைந்துள்ளது. இது தவிர 'அண்ணா ஸ்டேடியமும்' உண்டு.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் தங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ள உதவியாக மாவட்ட மைய நூலகம் அமைந்துள்ளது. அதில் ஐ.ஏ.எஸ். படிப்பவர்களுக்கு உறுதுணையாக தனிப்பிரிவு அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பழமையைப் போற்றும், புராதனப் பெருமையை விளக்கும் வகையில் அருங் காட்சியகம் ஒன்றும் எங்கள் ஊரில் உள்ளது. திருநெல்வேலி அகில இந்திய வானொலி நிலையம் இங்குதான் உள்ளது. மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து பாளை மேட்டுத் திடல் பகுதியில் இயங்கி வருகிறது. அன்றாடம் புத்தம் புதிதாய் காய், கனிகள் வாங்க மகாராஜநகர் பகுதியில் உழவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் 'உழவர் சந்தை' செம்மையாகச் செயல்பட்டு வருகிறது.



• முத்து

இவ்வளவு சிறப்புகளையும் உள்ளடக்கிய எங்கள் பாளையங்கோட்டை முன்பு நகராட்சியாக இருந்து இன்று நெல்லை

மாநகராட்சியின் ஒரு அங்கமாகத் திகழ்கிறது. பாளையையும் நெல்லையையும் சுலோச்சன முதலியார் பாலம் இணைக்கிறது. எங்கள் ஊரை அடுத்துள்ள திருநெல்வேலிக்குச் சென்றால் அங்கு காந்திமதி அம்பாள் சமேத நெல்லையப்ப சுவாமியைத் தரிசிக்கலாம். பிரும்மாண்டமான இக்கோயிலின் இசைத் தூண்களும் தேர்த் திருவிழாவும் மிகவும் பிரசித்தமானவை.

திருவாரூரில் பிறந்தால் மோட்சம் என்பார்கள். இவ்வளவு சிறப்புகளையும் கொண்ட பாளையங்கோட்டையில் பிறந்த நாங்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள்தான்!

- சு. கௌரி

பன்னிரண்டாம் வகுப்பு,

குழந்தை இயேசு மேல்

நிலைப் பள்ளி,

பாளையங்கோட்டை

எங்கள் ஊர் தூத்துக்குடி. எங்கள் மாவட்டத்தின் தலைநகரும் இதுவே. தூத்துக்குடி என்றதும் ஞாபகத்திற்கு வருவது முத்து மற்றும் உப்பு. தமிழ் நாட்டில் புகழ் பெற்ற ஒரே முத்து குளிக்கும் இடம் எங்கள் ஊரே என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இத்தொழில் இன்றளவும் நடந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உப்பு அதிகமாக விளையும் இடங்களில் வேதாரண்யத்திற்கு அடுத்த படியாக தூத்துக்குடி உள்ளது. தமிழ் நாட்டின் இரண்டாவது பெரிய துறைமுகம் தூத்துக்குடி துறைமுகமே ஆகும். இங்கிருந்து மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மியான்மார் போன்ற நாடுகளுக்குப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

எங்கள் ஊரில் இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன. பழைய பேருந்து நிலையம் ஊரின் மையப் பகுதியில் உள்ளது. இங்கு சிவன் கோயில் ஒன்று உள்ளது. இது மிகப் பெரியது. இங்கு புரட்டாசி சனிக் கிழமைகளும் பிரதோஷ தினங்களும் சிறப்பாக இருக்கும். சிவன் கோயிலுக்குச் சற்று வடக்கே தெப்பக்குளம் உள்ளது. இங்கு மாலை நேரத்தில் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் அமர்ந்து சிரித்து மகிழ்ந்து தெப்பக் குளத்தில் உள்ள மீன்களுக்கு பொரி வாங்கிப் போடுவர். பழைய துறைமுகத்திலிருந்து தெற்கே வந்தால் புனித பனிமய மாதா ஆலயம் உள்ளது. இதன் தெற்கே 4 கி.மீ. தொலைவில் புதிய துறைமுகம் உள்ளது. எங்கள் ஊரைச் சுற்றிப் பார்க்க ஒரு நாள், இரண்டு நாள் போதாது. எங்கள் ஊரில் 5 கல்லூரிகளும் 4 பெரிய தொழிற்சாலைகளும் பல சிறிய தொழிற் சாலைகளும் உள்ளன. எங்கள் ஊருக்குத் தொழிற்சாலை நகரம் என்ற பெயரும் உண்டு. எங்கள் ஊர்க் கடலில் தான் வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராக கப்பல் விட்டார். இரண்டு மார்க்கெட்கள் உள்ளன.



* துறைமுகம்

ஊருக்குக் கிழக்கே கடல் உள்ளது. கடலில் தூத்துக்குடி முதல் இராமேஸ்வரம் வரை 21 தீவுகள் உள்ளன. விளையாட்டு மைதானங்கள், பொது நூலகம் போன்றவைகளும் பூங்காக்களும் உள்ளன. வீரபாண்டிய கட்டபொம்மன், மகாகவி பாரதி, வ.உ.சிதம்பரனார் போன்றோர் முன்பு ஒன்றாக இருந்த எங்கள் மாவட்டத்துக்காரர்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

கோடை விடுமுறையில் ஊர் முழுவதும் திருவிழாக் கோலமாகத்தான் இருக்கும். நூலகம், விளையாட்டு மைதானம், பூங்கா, கலையரங்கம் போன்றவற்றில் கோடை காலத்தில் கூட்டம் அலைமோதும். இன்னும் ஓரிரு ஆண்டுகளில் சென்னையை விட மிகப் பெரிய தொழில் நகரம் ஆகும் என்பதில் ஐயமில்லை. எங்கள் ஊரைப் பார்க்க ஆசையாக இருக்கிறதா? விடுமுறையில் எங்கள் ஊருக்கு வாருங்கள்!

— ஐ. சுரேஷ்

ஒன்பதாம் வகுப்பு,

புனித சவேரியார் மேல் நிலைப்

பள்ளி, தூத்துக்குடி.

சிரிக்கும் பேய்!

இரண்டு நாட்களாக முத்தையா பள்ளிக்கூடம் வரவில்லை. கந்தனும் மணியும் கூட வரவில்லை. விடுமுறை கடிதமும் இல்லை. ஆசிரியர் மாணிக்கத்தையும் செல்லையாவையும் அனுப்பி அவர்களை அழைத்து வரச் சொன்னார்.

சஞ்சீவி மலைக்கு வடக்கு ஊர் மலையடிபட்டி. முத்தையா வீடு அங்குதான் உள்ளது. மலைக்குத் தெற்கே உள்ள ஊர் மதகுப்பட்டி. கந்தன், மணி இந்த ஊர்க்காரர்கள். மாணிக்கமும் செல்லையாவும் முதலில் மதகுப்பட்டிக்கு சைக்கிளில் போனார்கள். நான்கே தெருக்கள்தான். ஆனால் வீடுகள் பூட்டியிருந்தன. ஆள் நடமாட்டமும் இல்லை. அவர்கள் வியந்தபடியே மணி வீட்டில் போய் கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்த அவனது பெற்றோர் ''அடடா... உள்ளே வாங்க'' என இழுத்து கதவை உடனே மூடிவிட்டனர்.

மணியும் உள்ளே உட்கார்ந்திருந்தான்.

''என்ன இது?'' என்று கேட்டார்கள் இவர்கள்.

''எதுக்குத் தம்பிகளா இங்க வந்தீங்க? நாங்களே ரெண்டு நாளா பயந்து வெளியே போகாமல் இருக்கோம்.''

''என்ன நடந்தது? மணி ஏன் பள்ளிக்கூடம் வரலை? எதுக்கு இப்படி பயப்படறீங்க?''

''தம்பிகளா, ராத்திரியில ஏதோ பயங்கரமா அலறல் சத்தம் கேட்குது. ஆட்டையோ - மாட்டையோ அடிச்சிட்டுப் போயிடுது. கோழிகளைத் தூக்கிட்டு போயிடுது. பிசாசோ, ஏதேனும் பயங்கர மிருகமோ தெரியலை! பகலிலேகூட வந்திடுமோன்னு பயம்தான்! அதனால யாரும் வீட்டை விட்டு வெளியேறாமல் உள்ளேயே கிடந்து சாகுறோம். இதுல நீங்க வேற வந்துட்டீங்க? எப்படி தம்பி போவீங்க?''

''நீங்க ஊரோட இப்படி பயந்து சாகணுமா? ஒராளு, ரெண்டாளுன்னா பயப்படலாம்'' கோபத்துடன் கேட்டான் செல்லையா.

''எல்லோரும் இரவுல லைட் வச்சிக்கிட்டு, கம்புகளோட காவல் இருக்க வேண்டியதுதானே? இல்லேன்னா போலீசுல போயி சொல்றது?'' என்றான் மாணிக்கம்.

''எல்லாரும் அவங்கவங்க வீட்டுக்குள்ள இருந்தா எப்படி தம்பி ஒண்ணு சேர்வது?'' என்றார் மணியின் அப்பா.

''சரி, நாங்க கிளம்பறோம். நாங்களாவது ஆசிரியர்கிட்ட சொல்லி போலீசுல சொல்லச் சொல்றோம், இப்ப வர்றோம்'' என்றபடி கிளம்பினர். ''தம்பி பார்த்துப் போங்க. பயமா இருக்கு'' என்றனர் மணியின் பெற்றோர்.

அவர்கள் சைக்கிளில் ஏறி புறப்பட்டனர்.

''செல்லையா! அவங்க சொல்றதைப் பார்த்தா எனக்குக்கூட பயமாயிருக்கு''

''அட, சும்மா வா மாணிக்கம். நாமளே பயந்தா எப்படி? வா வா முத்தையா ஊருக்குப் போயிட்டு வருவோம்''

அவர்கள் சைக்கிளில் வேகமாக மிதித்து மலையடிபட்டி வந்து விட்டனர். இது ஏழெட்டு தெருக்கள் உள்ள ஊர். இங்கும் ஆள் நடமாட்டம் இல்லை. வீடுகள் பூட்டியே இருந்தன. அவர்கள் முத்தையா வீட்டில் கதவைத் தட்டினார்கள். முத்தையாவே கதவைத் திறந்தான்.


''என்னடா! ஸ்கூலுக்கு வரலே?''

''உள்ளே வாங்க சொல்றேன்'' என்றவன் கதவை மூடிக் கொண்டான். அவனது பெற்றோரும் வந்துவிட்டனர்.

''என்ன முத்தையா, கதவை ஏன் மூடினே?''

"எங்க ஊருல இரவு நேரத்துல ஒரு பேய் வருது, பயங்கரமா சத்தம் போடுது, சுடுகாட்டுல போயி புதைச்ச பொணங்கள தோண்டி எடுத்துச் சாப்புட்டுப் போயிடுது. அதுபகல்லேயும் வந்துடும்ன்னு பயந்து எல்லோரும் கதவுகளைப் பூட்டிகிட்டு உள்ளேயே இருக்கோம். அதான் பள்ளிக்கூடம் வரலை."

"என்னடா இது மதகுப்பட்டிக்குப் போனா ஆடு, மாடு, கோழிகளைப் புடிச்சிட்டு போயிடுது. பயங்கரமா சத்தம் போடுதுன்னு



அவங்களும் பயந்து போயி இருக்காங்க. இங்க என்னடான்னா சுடுகாட்டுப் பிணங்களைத் தோண்டி எடுத்துச் சாப்புட்டுப் போகுது பேயின்னு சொல்றே, என்ன பண்றது? சரி நாங்க போயிட்டு வர்றோம்."

"ஜாக்கிரதையா போங்கடா. வாத்தியார்கிட்ட என் லீவுக்குச் சொல்லிடுங்க" முத்தையா பயத்தோடுதான் பேசினான்.

அவர்கள் சைக்கிளில் புறப்பட்டுப் பள்ளிக்கு வந்து சேர்ந்தனர். ஆசிரியரிடம் நடந்ததைக் கூறினார்கள். "அடடா இதுக்கு என்ன செய்யறது? போலீசுக்குப் போவதா, வேறு ஏதேனும் வழியிருக்கா, யோசிச்சுச் செய்வோம்" என்றார் ஆசிரியர்.

ஒரு ஆசிரியர் கேட்டார்: "அந்த ஊர்களில் ஊர்த்தலைவர், நாட்டாண்மை ஏதும் முயற்சி எடுக்கலையா?"

"அவங்கள்ளாம் பயந்து ஊரை விட்டே போயிட்டாங்களாம்!"

மாணிக்கமும் செல்லையாவும் உணவு முடித்துவிட்டு மேல் வகுப்பு மாணவர்கள் சாப்பிடும் ஹாலுக்குச் சென்றனர்.

அமுதன், இளங்கோ, முருகேசன் மூவரையும் தனியே அழைத்து நடந்த விவரங்களைக் கூறினார்கள்.

"ஏண்டா சண்டை தகராறுன்னா போலீசுக்குப் போகலாம்; பேயி, மிருகம் இதுகளுக்கு போலீசுதான் என்ன செய்யும்?" அமுதன் கூறினான். "ஒண்ணு செய்வோம். நாளைக்கு நமக்கு விடுமுறைதானே! இன்னைக்கு ராத்திரி பத்திருபது மாணவர்கள் கம்புகளோடு அங்கே போனா என்ன?" இது இளங்கோ. "எனக்கு இன்னொரு ஐடியா வருது" என்றான் முருகேசன்.

"என்ன, என்ன சொல்லு?" பரபரத்தனர் மற்றவர்கள்.

"நாம நாளைக்குக் காலையிலே மேற்கு மலையடிவாரம் போயி ஆதிவாசி சிறுவன் நீலனை அழைத்து வந்து அந்த ரெண்டு ஊருகளுக்கும் போனால்என்ன?" என்றான் அமுதன். "சரியான யோசனை அப்படியே செய்வோம். அவனைக் கூட்டி வந்ததும் ஒரு இருபது முப்பது பேரா அந்த ஊர்களுக்குப் போகணும். வகுப்புல சொல்லிடுவோம்" என்றான் செல்லையா.

நான்கைந்து மாணவர்கள் சைக்கிள்களில் அதிகாலையிலேயே மேற்கு மலையடிவாரம் போனார்கள். நீலனைத் தேடிக் கண்டுபிடிக்க சிறிதுநேரம் ஆகிவிட்டது. மலைக்குப் போன அவனை அங்குள்ளவர்கள் அழைத்து வந்தனர்.

"என்ன சாமிகளா இந்த வெயில்லே?" என்றான் நீலன்.

"நீலா! எங்க ஊருக்குக் கிழக்குல ஒரு சின்ன மலை இருக்கு. சஞ்சீவி மலை. நீ கூட ஒருசமயம் வந்திருக்கே. அதுக்கு வடக்கேயும் தெற்கேயும் சின்னச் சின்ன ஊருகள் இருக்கு. இப்ப சில நாளா இரவு நேரங்கள்ல பயங்கரமா ஏதோ சத்தம் கேட்குதாம். ஆடு மாடு

கொ.மா. கோதண்டம்

களை அடிச்சிட்டுப் போயிடுதாம். கோழிகளைத் தூக்கிட்டுப் போயிடுதாம். எல்லாரும் பயந்து போயி கிடக்காங்க. நீ வந்து அது என்னன்னு பார்க்கணும்."

''சரி வாங்க போகலாம்'' என்ற நீலனை அவர்கள் சைக்கிளின் பின்னால் ஏற்றிக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு வந்தனர். அங்கு பல மாணவர்கள் எதிர்பார்த்து காத்திருந்தார்கள். அவர்களையும் அழைத்துக்கொண்டு முதலில் மதகுபட்டிக்குச் சென்றார்கள். ''கதவுகளைத் திறந்து எல்லோரும் வெளியே வாங்க'' என்ற இவர்களின் பேச்சைக் கேட்டு ஊர்க்காரர்கள் வந்து கூடி விட்டனர்.



எந்தெந்த வீட்டுப் பக்கம் இரவில் 'பேய் வந்தது என்பதைக் காட்டச் சொன்னான் நீலன்.

''சரி, எல்லோரும் உள்ளே வர வேண்டாம் கால் தடம் அழிஞ்சிப் போகும். அதைப் பார்க்கணும்'' என்று நீலன் கூறினான்.

கூட்டம் வெளியே நின்றது.

நீலன் சில தடங்களைக் குனிந்து பார்த்தான். தன் கைகளை முஷ்டியாக்கித் தடத்தில் வைத்து அளவு பார்த்தான். "சரி வாங்க அடுத்து வடக்கு ஊருக்குப் போகலாம்" என்றான்.

அந்த மாணவர்களும் ஊர்க்காரர்களும் நீலனோடு மலையடிபட்டிக்குச் சென்றார்கள். அவன் மட்டுமே உள்ளே சென்று பிணங்கள் தோண்டப்பட்ட குழிகளைக் கூர்ந்து பார்த்து கால் தடங்களை அளந்து பார்த்தான். ''இந்த ஊர்க்காரங்களைக் கூப்பிட்டு முதல்ல இந்தக் குழிகளை மூடச் சொல்லுங்க.''

"சரிப்பா உனக்கு என்ன தெரியுது?" என்றார் ஒருவர்.

"சொல்றேன் சாமி. இந்த ஊர்ல கிராமத்து மேளக்காரங்க யாராச்சும் இருக்காங்களா, அவங்கள மேளங்களோட கூட்டிட்டு வாங்க."

இரண்டு ஊர் மேளக்காரர்கள் மேளங்களுடன் வந்து விட்டார்கள். மற்றவர்களில் பலர் நீலன் கேட்டுக் கொண்டதற்கிணங்க தகரங்கள், டப்பாக்கள், டின்கள் முதலியன கொண்டு வந்தார்கள். அடிப்பதற்குக் குச்சிகளும் கைகளில் இருந்தன. நீலன் ஏதோ கால் பாத அடையாளங்கள் தெரிந்த பாதை வழி நடந்தான். அந்தப்பாதை சஞ்சீவி மலை மீது சென்றது. "இந்த மலையில ஏதாவது குகை, சுரங்கம், இருக்குங்களா" - நீலன்.

"ஆமாம் - நீலா அதோ தெரியுதே அதான் கழுதைக்கடவு. அங்கு குகை போல இருக்கும். கடவுக்கு மேலே மழை காலத்துல அருவிகூட விழும்."

"சரிதான் இந்தக் கால் தடங்கள் அங்க தான் போகுது. எல்லாரும் என் பின்னால் வாங்க" - சிறிது நேரத்தில் அவர்கள் சஞ்சீவி மலை கழுதைக்கடவு அருகில் சென்று விட்டார்கள். "சரி இப்ப மேளங்களைச் சும்மா தடதடன்னு அடிங்க. தகரங்களையும் அடிங்க" நீலன் சொன்னதும் அங்கு மேள தகர ஓசைகள் பயங்கரமாக ஒலித்தன. ஏதும் நிகழவில்லையாதலால்



நீலன் கைகளை அமர்த்தினான். அடிக்கும் ஓசைகள் நின்றன. "காய்ந்த புல்லு இலைதழைகளைக் கொண்டு வாங்க" - நீலன் சொன்னதும் சேகரித்து வந்தனர். கழுதைக்கடவு குகையின் முன்னே குவித்து நீலன் அதில் தீ பற்ற வைத்தான்.

தீ தகதகவென எரிந்தது. புகை மண்டலம் இடங்களை மறைத்தது. குகையிலிருந்து ஏதோ சத்தமிட்டவாறே ஒரு விலங்கு பாய்ந்து வந்தது.

ஒரே தாவாகத் தாவி பாறைகள் வழியாகக் கீழே இறங்கி ஓடியது. ஓடும்போது இடுப்பில் அடிபட்டது போல நொண்டி வளைந்து ஓடியது. "பின்னாலேயே அடிச்சுகிட்டு ஓடுங்க" என்ற நீலன் குரல் கேட்டு எல்லோரும் அப்படியே செய்தனர். அந்த விலங்கு மலையில் இறங்கி, ஊரைத் தாண்டி, சாலையைத் தாண்டி, ஆற்றைத் தாண்டி காட்டு வழியாக வேகமாக ஓடி மறைந்தது.

"இது என்ன மிருகம், நீலா? இதுதான் இப்படி செஞ்சதா? இது எப்படி இங்கு வந்தது?" என்று பலரும் இதையே கேட்டனர்.

"சாமி - இதுதான் கழுதைப் புலி. எங்க மேற்கு மலையில இருந்து இப்படியே காட்டு வழியா இந்தச் சின்ன மலைக்கு வந்திருக்கு. நீங்க பொணங்கள தோண்டி பேயி வந்து திங்குதுன்னு சொன்னப்பவே நான் நினைச்சேன் - இது கழுதைப் புலிதான்னு. இது எப்பவும் மத்த மிருகங்க வேட்டையாடித் தின்ன மிச்சம் கழிவு மாமிசங்களைத்தான் தின்னும். பொதச்ச பிணங்களையும் தோண்டி தின்னும். இது காட்டுக்கு தோட்டி. இது பயந்த கோழை மிருகந்தான். ஆனால் ஏமாத்தி கூட்டிட்டு போயி அடிச்சதுன்னா புலி காலுகூட ஒடிஞ்சிடும். இதன் முன்னாங்கால் நீளம் பின்னங்கால் குட்டை. அதனால இடுப்பு ஒடிஞ்ச மாதிரி ஓடும். இது ராவுல பயங்கரமா சத்தம் போடும். சில சமயம் பைத்தியம் சிரிக்காறாப்பல இருக்கும் சத்தம்."

"இதுக்குத்தான் நீங்க ரெண்டு மூணு நாளா பயந்து வீடுகள பூட்டி இருந்துருக்கீங்க. சரி, இப்ப ஓடிடுச்சி. இனிமே ஒண்ணுமில்லே சாமி"

நீலனுக்குப் புது உடைகள், போர்வைகள், கம்பளிகள் அங்கு நிறையவே கிடைத்தன. பல வீடுகளில் அவனுக்கு விருந்தும் தரப்பட்டது.

மாணவர்கள் "சரி, எங்களுக்கு நேரமாச்சி, நீலனை மேற்கே மலையடிவாரத்துல விட்டு வரணும். நாங்க கிளம்பறோம்" என்றதும் ஊர்க்காரர்கள்,

"தம்பிகளா உங்களாலதான் நாங்க இன்னிக்கு நிம்மதியா தூங்கப் போறோம். - எல்லாருக்கும் நன்றிப்பா" என்றனர்.

"சரிங்க வர்றோம்" என்றனர் மாணவர்கள்.

அவர்கள் கைகளை ஆட்டி விடை கொடுத்தனர்.

தூக்கம்!




அறிவியல் ஆசிரியர் மின்னோட்டவியல் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். என் நண்பன் கோயில் திருவிழாவில் முதல் நாள் இரவு பாட்டுக் கச்சேரியை வெகுநேரம் கேட்டு விட்டு வந்திருந்தான். அதனால் அவனுக்குத் தூக்கமாக வந்தது. கஷ்டப்பட்டு கட்டுப்படுத்தியும் ஒரு கட்டத்தில் அயர்ந்து விட்டான். ஆசிரியர் அவனை எழுப்பி "என்ன கனவு கண்டாய்?" என்றார் கோபத்துடன். நான் வைத்திருந்த புத்தகத்தில் மின்னோட்டவியல் பாடத்தை ஓரக் கண்ணால் பார்த்த நண்பன் "எங்கள் அன்பான அறிவியல் ஆசிரியர் மின்னோட்டவியல் பாடத்தை மிகத் தெளிவாக நடத்திக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டேன் சார்" என்றான். அவனின் சாமர்த்தியத்தைக் கண்டு ஆசிரியரே அசந்து போனார். குடிக்க வைத்திருந்த தண்ணீரைக் கொடுத்து முகம் கழுவி வரச் சொன்னார்.

– ராமகிருஷ்ணன்,
காயக்காடு.

எங்கள் பள்ளியில் நடந்தது!

வயது என்ன?

கணிதப் பாட வேளை. ஆசிரியர் ஒரு மாணவனிடம் "போன பிறந்த நாளின் போது உனக்குப் பதினோரு வயதென்றால் அடுத்த பிறந்த நாளின் போது உன்னுடைய வயது என்ன? என்று கேட்டார். அவன் "பதிமூன்று" என்று பதில் சொன்னான். உடனே ஆசிரியர் "என்ன உளறுகிறே? போன பிறந்த நாளின் போது உனக்கு பதினோரு வயதென்றால் அடுத்த பிறந்த நாளில் உனக்கு பன்னிரண்டு வயதுதானே" என்றார். "போன வருடம் எனக்குப் பதினோராவது பிறந்தநாள். இன்று எனக்குப் பன்னிரண்டாவது பிறந்த நாள். அதனால் அடுத்த பிறந்த நாளின்போது பதிமூன்று தானே ஆகும் சார்" என்றான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.



– அ. ஆறுமுகம்,
ஏழாம் வகுப்பு,
அரசு மேல் நிலைப் பள்ளி,
செந்துறை.

எங்கள் பள்ளியில் நடந்தது!



பெயர் சொல்லி...

எங்கள் அறிவியல் ஆசிரியர் பெயர் அப்பா சாமி. அவர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான விடை சொல்லவில்லையென்றால் இரண்டு கைகளையும் நீட்டச் சொல்லி அடிப்பார். அன்றும் வரிசையாகக் கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார் ஆசிரியர். முத்து என்ற மாணவன் கேள்விக்குப் பதில் தெரியாமல் திருதிருவென விழித்தான். ஆசிரியர் கையை நீட்டச் சொல்லி ஒரு அடி போட்டார். அவன் வலிதாங்க முடியாமல் "அப்பா" என்று கத்தினான். இன்னொரு கையில் இன்னொரு அடி கொடுத்தார். அவன் "சாமி" என்று கதறினான். உடனே ஆசிரியர் "நான் தான் உன் முன்னாலேயே நிற்கிறேனே. என் பெயரைச் சொல்லி ஏன் கூப்பிடறே? என்றார் சிரித்தபடி.

– நா. சரண்யா,
பெருந்துறை.

பதினான்காம் லூயி!

சமூக அறிவியல் பாடவேளை. "ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற பாராளுமன்ற அவை 175 ஆண்டுகளாகக் கூட்டப் படாமல் இருந்தது. பதினான்காம் லூயி என்பவர் அதை மீண்டும் கூட்டினார்" என்றார் ஆசிரியர். பின்னால் உட்கார்ந்திருந்த மாணவி ஒருத்தி பாடத்தைக் கவனிக்காமல் எதையோ தேடிக் கொண்டிருந்தாள். ஆசிரியர் கோபத்தோடு அவளை எழுப்பி "இப்ப என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்?" என்றார். உடனே அவள் "ஒரு பெரிய அறை 175 ஆண்டுகளாகக் கூட்டாமல் இருந்தது. அதைப் பதினான்காம் லூயி அவர்கள் தான் கூட்டிச் சுத்தப்படுத்தினார்" என்றாள். எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆசிரியர் சரியான விடையை ஐம்பது முறை எழுதும்படிக் கூறி உட்கார வைத்தார்.



– வே. தீபா,
அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.


அதிர்ஷ்டம்!
கதை: சக்தி சரவணன், மோகனூர்.
படம்: சுமன்
பொன்னம்பலம் ஒரு பணக்கார பண்ணையார்.
லட்சாதிபதியாக இருக்கும் நான் கோடீஸ்வரன் ஆகணும்... என்ன செய்யலாம்?
ம்... முனியா அந்த ஜோஸியக்காரரை அழைத்து வா.
சரிங்க ஐயா!
வாங்க ஜோஸியரே! நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்.
என்ன வேணும்னாலும் பண்ணலாம். சொல்லுங்க.
லட்சாதிபதியா இருக்கிற நான் சீக்கிரம் கோடீஸ்வரனாக ஆகணும்.
ம்... அதுக்குக் கொஞ்சம் செலவாகுமே!
எவ்வளவு வேணும்னாலும் இப்பவே தரேன்.
சரி. நீங்கள் தினமும் ஜோடிப்புறா முகத்தில் கண் விழிக்கணும்.


புறாக்களை .வாங்கிக் கூண்டில் அடைச்சுப் பார்க்கலாமா?
அது கூடாது! இயற்கையா வந்து உட்காருகிற புறாக்களைத்தான் பார்க்கணும்!
முனியா... ஜோடிப்புறா வந்ததும் கூப்பிடு.
சரிங்க ஐயா!
மறுநாள் காலை--
ஜோடிப்புறா வந்துடுச்சு. சீக்கிரமா வாங்க ஐயா!
அப்படியா! இதோ வரேன்.
பண்ணையார் ஜன்னல் வழியே பார்த்தார்—



ஏண்டா ஒரு புறாவைக் காட்டினே?
அடிக்காதீங்க ஐயா... நீங்க வர்றதுக்குள்ள ஒண்ணு பறந்துடுச்சு.
என் அதிர்ஷ்டத்தையே கெடுத்துட்டியேடா, பாவி!
ஜோடிப்புறா முகத்தில் விழிச்ச நான் இப்படி அடி வாங்கறேனே!
இதெல்லாம் ஏமாற்று வேலைங்க ஐயா.
நீ சொன்னது சரிதான் முனியா, மன்னிச்சுடு. இனிமேல் ஜோசியக்காரனை உள்ளே விடாதே!
உழைப்புதான் உயர்வு தரும். பேராசை அல்ல!



ஒரு நாளைக்கு இதயம் துடிப்பது எத்தனை முறை?

குருவிக் கூடு

27 தேர்ந்தெடுத்த தலைப்புகளில் சொக்க வைக்கும் சந்தங்களில் அருமையான பாடல்களின் தொகுப்பு. 'நீச்சலடித் தேன்', 'எனக்குத் தெரிந்த எலி' போன்ற பாடல்கள் இதுவரை யாரும் தொடாத பொருள்கள். பாடலுக்கேற்ப அழகான படங்கள் இருப்பது சிறப்பு.

கவிஞர் செல்ல கணபதி, பக்-72, ரூ.18/-, பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

நூலக நேரு

சிறுவர்க்கான நகைச்சுவைப் பாடல்களை எழுதுவதில் பெருமை பெற்ற ஆசிரியரின் படைப்பு இது. நூலக இயலுக்கு உயிரூட்டி உலக அளவுக்கு இந்தியரின் பெருமையை உயர்த்திய நூலகத் தந்தை எஸ்.ஆர். ரங்கநாதனின் வாழ்க்கை வரலாறு. ரங்கநாதனின் நூலகக் கனவுகள், அவற்றைச் செயலுக்குக் கொண்டு வர அவர் உழைத்த உழைப்பு, உலகே ஒப்புக் கொண்ட கோலன் முறைப் பகுப்பு, எளிய வாழ்க்கை எல்லாம் இதில் அருமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஏ.வி.எம். தங்கப் பதக்கம் பரிசு பெற்ற நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்.பி. சாரதி, பக்-88, ரூ.20/- ஜெயலட்சுமி பதிப்பகம், 1. விஸ்வநாதபுரம், ராகம் பேலஸ், பழவந்தாங்கல், சென்னை - 113.

விவேகானந்தரின் வியத்தகு அறிவுரைகள்

உலகப் புகழ் பெற்ற விவேகானந்தரின் அறிவுரைகள் 39 தலைப்புகளில் தொகுக்கப்பட்டு மாணவர்கள் பயன்படுத்த ஏற்ற வகையில் தரப்பட்டுள்ளது. இந்திய ஞானத்தின் உயர்வை உலகறிய வைத்த பேராளரின் அறிவுரைகள் எந்தக் காலத்திலும் பொருத்தமாக அமைந்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

செந்துறைமுத்து, பக்-124, ரூ.23/- இராமநாதன் பதிப்பகம், பிளாட் எண்:4698, ஏஏ144, மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை - 40.

ஒரு லட்சம் துடிப்புகள்

மனித இதயம் ஒரு நாளைக்கு எத்தனை முறை துடிக்கிறது தெரியுமா? (ஒரு லட்சம் முறை). சராசரியாக ஒரு நிமிடத்திற்கு இதயம் துடிப்பது எத்தனை முறை தெரியுமா? (எழுபது முறை) இதயமாற்று ஆபரேஷன் என்றால் என்னவென்று தெரியுமா? இதைப் போன்ற பல அதிசயத்தக்க இதயம் பற்றிய செய்திகளை மிக எளிமையாகத் தந்துள்ளார் ஆசிரியர்.

டாக்டர் எஸ்.ஏ.பி. ஜவஹர் பழனியப்பன், பக்-64, ரூ.12/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

— ரே.

திரை ஏன் இறங்கவில்லை?

விசித்திரபுரி மன்னருக்குத் தன் அமைச்சர் விசுவாசன் மேல் அபாரப் பிரியம். அவருக்கு ஏகப்பட்ட பரிசுகளையும் சலுகைகளையும் கொடுத்திருந்தார். இது பொறாமைக்காரர்களின் ஆத்திரத்தைக் கிளப்பியது. விசுவாசனைத் தொலைத்து விட திட்டம் தீட்டினர்.

ஒரு அற்புதமான நாடக நடிகனுக்கு ஏராளமான பணம் கொடுத்துத் தங்கள் திட்டத்துக்கு சம்மதிக்க வைத்தனர்.

நடிகன் குழுவுடன் அரசனைச் சந்தித்து அரண்மனையில் நாடகம் போட அனுமதி வேண்டினான். அரசர் நாடகக் கதையைக் கூறுமாறு தெரிவித்தார்.

அவன் சீவக சிந்தாமணியில் ஒரு பகுதியைக் கூறினான். "சசாங்கனும் கட்டியங்காரனும் ஆர்ப்பாட்டமாக சண்டையிடுகிறார்கள். கட்டியங்காரனுக்கு ஆவேசம் ஏற்பட்டு சசாங்கனைக் கொன்று விடுகிறான். அதோடு விட்டானா? கண்ணில் கண்டவரையெல்லாம் தீர்த்துக் கட்டி அரியணை ஏறுகிறான். இது முதல் நாள் நாடகப் பகுதி" என்றான்.

அரசர் சம்மதித்தார்.

ஆனால் விசுவாசனுக்கு நடிகனின் பேச்சில் கள்ளம் இருப்பதாகத் தோன்றியது. தன் உயிர் நண்பர்கள் இருவரைத் தன் இரு பக்கமும் அமர ஏற்பாடு செய்தார்.

"அசம்பாவிதமாக ஏதாவது நடக்காதபடி



கவனமாக இருக்க வேண்டியது உங்கள் பொறுப்பு" என எச்சரித்தார்.

அந்த நடிகன் அரசரிடம் பேசும் போது பார்வை முழுவதும் தன் பக்கமே இருந்ததுதான் விகவாசனின் சந்தேகத் துக்குக் காரணம்.

நாடகம் உணர்ச்சிமயமாக இருந்தது. காட்சி அமைப்புகள் தத்ரூபமாக இருந் தன. நடிகன் கத்தியபடி மேடையி லிருந்து கீழே குதித்தான்.

நேரே விகவாசனிடம் வந்து அவர் மார்பில் கத்தியைச் சொருக முற்பட்ட போது இரு பக்கமும் இருந்த நண்பர்கள் நடிகன் கையை இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டனர்.

விகவாசன் பிழைத்தார்.

''உணர்ச்சிவசப்பட்டு விட்டேன்'' என்று அசடுவழிந்தான் நடிகன்.

"அற்புதமான நடிப்பு! என்ன மாதிரி பாத்திரமானாலும் நடிப்பாயா?" என்று கேட்டார் விகவாசன். "நான் ஒரு கதை சொல்கிறேன். நாளை அதை நடிக் கிறாயா?"

ஒப்புக் கொண்டான் நடிகன். அது அவனுக்கு சவால் விடுவது போலிருந் தது.

''ஒருத்தனுக்கு மனைவி மேலே ரொம்பப் பிரியம். அதை விளக்க சில காட்சிகள் அமைத்துத் தருகிறேன். திடீ ரென்று அவள் நோய் வாய்ப்படுகிறாள். அவன் அக்கறையாக வைத்தியரிடம் காட்டி மருந்து கொடுத்து, வேண்டிய உதவிகள் செய்து கவனித்துக் கொள் கிறான். ஆனால் அவள் இறந்து விடு கிறாள். பிரிவுத் துயர் தாங்காமல் அவன் கதறி அழுகிறான். மயானத்துக்குக் கொண்டு போய் மனைவியின் உடலுக் குத் தீ மூட்டுகிறார் கள். திடீரென்று நெருப்பில் பாய்ந்து விடுகிறான் கணவன். இதுதான் கதை'' என்று கூறிய விகவா



மாலதி

சன் நாடகத்துக்கு ஊதியமாக அவன் எதிர்பார்க்காத ஒரு தொகையையும் கூறினார்.

நடிகன் மகிழ்ச்சியோடு சம்மதித்தான்.

"சிவக சிந்தாமணி மூன்றாம் நாள் தொடரும். நாளை புதிய நாடகம்" என்று அறிவிப்பும் கொடுத்து விட்டான்.

"நடிகன் ரொம்ப உணர்ச்சிவசப் படுகிறான். அக்கினியில் குதித்து விட்டால்...?'' என்று கவலைப்பட்டார் அரசர்.

"அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று தைரியம் சொன்னார் அமைச்சர்.

நாடகம் அற்புதமாய் நடந்து கொண்டிருந்தது. திறந்தவெளி அரங்கம் ஆனதால் ஏழடி நீளத்துக்குச் சிதை அமைத்திருந்தார்கள். மனைவியாக நடித்தவனை அதில் கிடத்தினார்கள். அவள் அடி வழியாகத் தப்பி ஓட சுரங்க வழி அமைத்திருந்தார்கள். மேலே இருந்தது வறட்டியும், விறகும். அதைப் பற்றவைத்தனர். கொழுந்து விட்டெரிய எண்ணெய் ஊற்றப்பட்டது.

ஜனங்களும் அரசாங்க அலுவலர்களும் அரசரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு அடுத்து வரும் காட்சிக்காகக் காத்திருந்தனர்.

காண்பவர் உருகும்படி கதறி அழுதான் நடிகன். அவன் பாய்வது போல் போக்குக் காட்ட திரை விழ வேண்டும்.

விசுவாசனின் ஏற்பாட்டின்படி திரை விழவில்லை! வசனம் முடிந்து விட்டது. நெருப்பில் பாய முற்பட்டவன் நின்றான்.

"அட, சோம்பேறிகளா! தூ! திரையை இறக்காம தூங்கறீங்களா?" என்றானே பார்க்கலாம்!

விசுவாசன் 'சடா'ரென மேடையேறி, "நேற்று மட்டும் உணர்ச்சிவசப்பட்டு மேடையிலிருந்து குதித்து என்னைக் குத்த வந்தாய்! பக்கத்திலிருப்பவர்கள் தடுத்திராவிட்டால் நான் பரலோகம் போயிருப்பேன்! இன்று ஏன் தீயில் விழவில்லை?" என்று மிரட்டினார்.

உண்மையை ஒப்புக் கொண்ட நடிகன் சதிகாரர்களைக் காட்டிக் கொடுத்தான்.

அரசர் விசுவாசனை மேலும் பாராட்டிப் பரிசளித்தார்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 கோ	ட்	டா	ன்	■	ம்	ழ	வ	2 ப
தா	■	■	■	3 ப	■	■	■	ப்
4 வ	ழி	■	5 தா	ய	ம்	■	லை	6 பா
ரி	■	ல்	■	ம்	■	ல்	■	ளி
■	7 கா	க	ம்	■	ர்	யி	8 த	■
ரை	■	9 ந	■	10 வை	■	11 ம	■	லி
தி	12 ம	■	13 வை	ர	ம்	■	ழ்	14 தா
த்	■	■	■	ஸ்	■	■	■	த்
15 மு	ரு	ங்	கை	■	தை	ந்	ல	16 இ





ஹார்தினி கதா

12 வயதாகும் ஹார்தினி கதாவுக்கு இரண்டாயிரமாவது ஆண்டின் 'மில்லெனியம் ட்ரீமர்ஸ் அவார்ட்' கிடைத்திருக்கிறது. 8லிருந்து 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்காக மெக்டொனால்ட் மற்றும் டிஸ்னி நிறுவனங்களுடன் யுனெஸ்கோ நிறுவனமும் சேர்ந்து இந்த விருதை ஏற்படுத்தியுள்ளன. சமுதாயப் பணி செய்த 105 நாடுகளைச் சேர்ந்த 2000 குழந்தைகளுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இதில் மும்பையைச் சேர்ந்த ஹார்தினியும் ஒருவர்.

ஹார்தினியின் சகோதரி மனநலம் பாதிக்கப்பட்டவர். மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதியான பள்ளிகள் இல்லாதது குறித்து வருத்தப்பட்டார் ஹார்தினி. பதினோராவது வயதிலேயே ஓவியங்கள் தீட்டிக் கண்காட்சி நடத்தினார். அதில் கிடைத்த 2,18,000 ரூபாயை மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு வழங்கி விட்டார். இதே போல் மீண்டும் ஒரு ஓவியக் கண்காட்சியை நியூயார்க்கில் நடத்தி கிடைத்த 15,000 டாலர்களையும் மும்பையிலுள்ள 5 நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கிறார். ஹார்தினியின் இந்தச் சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது.

பெங்குவின்களுக்கு ஆபத்து!

தென் ஆப்பிரிக்காவில் கேப்டவுன் கடற்கரைக்கு அப்பால் 10 கி.மீ. தூரத்தில் எண்ணெய் கப்பல் ஒன்று கடலில் மூழ்கி விட்டது. இதிலிருந்து வெளியாகும் எண்ணெய்க் கசிவினால் பெங்குவின்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. அங்கு வாழும் ஆயிரணக்கணக்கான பெங்குவின்களைக் காப்பாற்றவும், எண்ணெய்க் கசிவை நிறுத்தவும் தென் ஆப்பிரிக்க அரசு முயன்று வருகிறது.

செவ்வாயில் உயிரினம்

செவ்வாய் கிரகத்தைத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர் அமெரிக்காவின் நாசா விண்வெளி விஞ்ஞானிகள். சமீபத்தில் 'மார்ஸ் குளோபல் சர்வேயர்' என்ற விண்வெளி ஓடம் புதிய கண்டுபிடிப்பை வெளியிட்டது. செவ்வாய் கிரகத்தில் அண்மைக் காலம் வரை தண்ணீர் இருந்துள்ளதற்கான ஆதாரங்கள் காணக் கிடைக்கின்றன. எனவே அங்கு உயிரினங்கள் கூட இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்பதுதான் அந்தக் கண்டுபிடிப்பு. நிலத்திலிருந்து நீர் பீறிட்டு வெளியேறி ஓடிய அடையாளங்கள் அங்கு உள்ளன. இப்போது கூட செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பிற்குச் சற்றுக் கீழே தண்ணீர் திரவ நிலையில் இருக்கலாம். அவ்வாறு இருந்தால் உயிரினங்கள் இருப்பதற்கான வாய்ப்பு நிச்சயம் உள்ளதாக நாசா தெரிவிக்கிறது. எனவே செவ்வாயில் முன்னொரு காலத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருப்பதற்கான அல்லது வாழ்ந்து வருவது குறித்த ஆதாரங்கள் கிடைத்து விட்டால் அது மிகப் பெரிய கண்டுபிடிப்பாகி விடும். எனினும் செவ்வாயில் உயிரினங்கள் இருந்தால் அது பாக்டீரியா அளவோ அல்லது அதை விடச் சிறியதாகவோ தான் இருக்கும் என்கிறது நாசா ஆய்வுக் கூடம்.




கோகுலம் நியூஸ்



• காந்தியடிகள்

அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் மூன்றாம் பரிசு பெறும் இரண்டாவது கட்டுரை

காந்தியடிகள், தம்மை ஏளனமாகப் பேசிய சர்ச்சிலையும் இங்கிலாந்து பேரரசையும் எதிர்த்துப் போராடினார். இந்திய நாட்டுக்கு விடுதலையும் வாங்கித் தந்தார். அச்சாதனைக்குக் காரணம், தம்மால் அது முடியும் என்றெண்ணி முடியும் வரை அயராமல் உழைத்ததேயாகும்.



• எடிசன்

உழைப்பின் ஊறா
உறுதிகள் உளவோ:

உழைப்பு என்பது இமைப் பொழுதும் சோராதிருத்தலே ஆகும். உழைப்பின் மூலம் தனி மனிதன் மட்டும் அல்லாமல் குடும்பமே முன்னேற முடியும். எளிய குடும்பத்தில் பிறந்த ஒருவன் தன் அயரா உழைப்பால் முன்னேற்றம் அடைவான். இப்படி ஆயிரக் கணக்கானோர் உழைப்பால் உயர்ந்ததை வரலாறு பதிவு செய்திருக்கிறது.

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்று டாடா. அது டாடா என்பவரால் பல ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டதாகும். டாடா ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவர், தம் அயரா உழைப்பினாலேயே உயர்ந்தார் என்றால் அவருடைய உழைப்பின் ஆற்றலை அறிய முடியும் அன்றோ?

இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்து பெரிய நெருக்கடியில் சிக்கியது. அப்போது தலைமை அமைச்சராயிருந்த சர்ச்சில் சோர்வடையாமல், "இறுதிவரை போராடுவோம். சரண் அடைய மாட்டோம்" என்று கூறி அதைச் சாதித்துக் காட்டினார். இதன் மூலம், அவருடைய உழைப்பின் ஆற்றலை அறியலாம்.

கிரேக்க நாட்டில் மாசிட்டோனியா என்ற ஊரில் பிறந்தவர் அலெக்சாண்டர். இளம் வயதில் அவர் மனத்தில் உலகையே வெல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. தன் அயரா முயற்சியால் தம் முப்பத்திரண்டாம் வயதிற்குள் சாதித்துக் காட்டினார். ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா என்னும் மூன்று கண்டப் பகுதிகளையும் அவரால் வெல்ல முடிந்தது.

தாமஸ் ஆல்வா எடிசன், சிறிய வயதில், ரயில் பெட்டிகளில் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்தார். அவர் வறுமையையும் இடையில் தமக்கு ஏற்பட்ட காது கேளாத குறையையும் பொருட்படுத்தாமல் தன்

அயரா உழைப்பால் பல புதிய கருவிகளைக் கண்டுபிடித்தார்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் ஆப்ரஹாம் லிங்கன். அவர் படிப்பை இடையிலேயே நிறுத்தும் வண்ணம் அவர் குடும்பம் வறுமையில் தத்தளித்தது. தேர்தலில் வென்று அமெரிக்க நாட்டுக்கே அதிபரானார்.

ஒலிம்பிக் விளையாட்டில் உழைப்பால் உயர்ந்து சாதனை நிகழ்த்திக் காட்டியவர் உலுகானி என்பவர். அவர் 1988-ல் கொரியாவின் தலைநகரான சியோலில் நடந்த ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில் கலந்து கொண்டபோது, மண்டையில் அடிபட்டு இரத்தம் வழிந்து ஐந்து தையல்கள் போடப்பட்டது. இருந்தும் நீரில் குதித்து நீந்திச்சென்று தங்கப் பதக்கம் பெற்றுப் பெருமை அடைந்தார். அதற்கு அவருடைய தளரா முயற்சியும் உழைப்புமே காரணமாகும்.



• டாடா

ராபர்ட் புரூஸ் என்ற மன்னர், பகைவரிடம் தோற்றுக் காட்டில் ஒரு மலைக் குகையில் மறைந்திருந்தார். பல முறை படையெடுத்தும் பகைவரை வெல்ல முடியவில்லை. ஒரு நாள் குகை வாயிலில் சோர்வுறாமல் முயன்று தனக்கு உரிய வலையைப் பின்னி முடித்த சிலந்தியைப் பார்த்துத் தோல்விக்கு அஞ்சாது முயன்று, மீண்டும் உழைத்துப் படை திரட்டிச் சென்று வெற்றி பெற்றார் என்பது வரலாறு.

மனச் சோர்வு இல்லாமல் இடைவிடாமல் முயன்று உழைப்பவர் விதியையும் வென்று புறம் கண்டு, எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவர். உழைப்பு விதியையும் வெல்ல வல்லதாகும் என வள்ளுவர் உழைப்பின் உயர்வைத் தம் குறளில் விளக்கியிருக்கிறார்.

முதல் முயற்சியில் வெற்றி கிட்டாமல் போய் விடலாம். அதனால் ஆத்திரப்பட்டு முயற்சியைக் கைவிட்டுவிடக்கூடாது. மேலும் மேலும் விடாமல் முயல வேண்டும். அதனால் வெற்றி கிட்டும் என்பதற்காகவே நம் முன்னோர் உழைப்பு, முயற்சி என்பதனோடு நிறுத்தி விடாமல், உழைப்பு, விடாமுயற்சி என்றும் குறிப்பிட்டனர். ஒரு நாட்டு மக்கள் உழைப்பாலேயே உயர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு ஜப்பான். எப்படியெனில், அணுகுண்டுகளால் நாசமானது மட்டுமின்றி, பொருளாதாரமும் சீர்குலைந்திருந்ததை, மிகக் மிகக் குறுகிய காலத்தில் ஜப்பானால் தீர்க்க முடிந்தது. அந்த நாட்டு மக்களின் உழைப்பாலேயே இது சாத்தியமானது. இன்று, தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஜப்பான் முன்னணியில் உள்ளது. உலகச் சந்தையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் நான் என்ற உணர்வு குறைந்து நாம் என்ற கூட்டுணர்வு அந்த நாட்டு மக்களிடையே இருப்பதால் தான்.

— எம்.ஒய்.முஹம்மது குரைஷ்,
எட்டாம் வகுப்பு,
முஸ்லீம் வித்யா சங்க உயர்நிலைப் பள்ளி, காரைக்கால்.

கோடை விடுமுறைப் போட்டி-2 முடிவு

பழமொழியைக் கண்டுபிடியுங்கள் போட்டியில் நிறையப் பேர் பங்கு கொண்டு சரியான விடையையும் அளித்திருந்தனர். எனவே குலுக்கல் முறையில் பத்துப் பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :-

1. சு.ராஜலெக்ஷ்மி, சிதம்பரம் 2. அ.ஜெகதீஸ்வரி, வடக்கு காட்டூர், திருச்சி 3. சு. அபிதா, ராணிப்பேட்டை 4. என். விசு, கூறைநாடு, மயிலாடுதுறை 5. ஆர். ராஜ்குமார், திண்டுக்கல் 6. எஸ்.ஆர். அருண், சிவகிரி, நெல்லை மாவட்டம் 7. ஜி. சண்முகவள்ளி, மாகாளிபட்டி, மதுரை 8. எஸ்.கவிதா, திருநெல்வேலி 9. டி.ஜி. சிவப்ரியா, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம் 10. ஞா. மாடசாமி, திருக்காட்டுப் பள்ளி, தஞ்சாவூர்

சரியான விடை :- சுமை கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



மாதிரி, நாலா பக்கமும் குட்டையாகவும், நீளமாகவும் கூரான முட்கள் அடர்த்தியாக முளைத்திருக்கும். நன்றாக முற்றிய கதிர்கள், காற்றடிக்கும்போது செடியிலிருந்து பிரிந்து கடற்கரையிலே உருண்டு செல்லும். இந்த முள் கதிர்கள் ஏதோ ஒரு கடல் பிராணி அங்கும், இங்கும் ஓடுவது போல் தோன்றும்! கையில் எடுத்துப்

ராவணன் புல்!

புல் என்றால், நமக்கு உடன் நினைவுக்கு வருவது அருகம்புல், கோரைப் புல், தர்பைப் புல் மற்றும் ஆடு, மாடுகள் போன்ற மிருகங்களின் உணவாகும் பல்வேறு வகைப் புற்கள்.

நமது சாப்பாட்டிற்கான நெல்லும் மூங்கிலும் கூட புல் வகையைச் சார்ந்த தாவரங்களே! அதெல்லாம் சரி. இதென்ன ராவணன் புல்! இப்படியும் ஒரு புல், நம் தமிழ்நாட்டில் இருப்பது கோடியக்கரை கடற்கரைப் பகுதியில். சின்னச் சின்னக் குத்தாக, சுமார் 1 அடி முதல் 2 அடி உயரம் வளரும். செடியின் தலை மேலே உருண்டையான கதிர், எலுமிச்சம் பழம் முதல் டென்னிஸ் பந்து அளவில். நடுவே சிவப்பு நிறத்தில் ஒரு பகுதி. இதிலிருந்து சூரிய கிரகணம்


பார்க்கும்போது, முள் குத்தினால் வலியும் எரிச்சலும் கடுகடுப்பும் தாங்க முடியாது!

இந்தப் புல் இலங்கையிலிருந்துதான் இங்கு வந்ததாம்! புராணத்திலும் சரித்திரத்திலும் இலங்கைக்கும் கோடியக்கரைக்கும் ரொம்பவும் நெருக்கமான உறவு என்று நமக்கெல்லாம் தெரியும். குத்தினால் ரொம்பவும் சங்கடப்படுத்தும் இதற்கு, அரக்கர் தலைவன் ராவணன் பெயரையே வைத்து விட்டார்கள்!

ராவணன் புல்லுக்கு ராவணன் முடி, ராவணன் மீசை என்று மேலும் சில பெயர்கள் உண்டு. விஞ்ஞானப் பெயர் Spinifex squarrosus.


– ஏ.சி. சௌந்தர்ராஜன்,
உதகமண்டலம்.

கோகுலம் சுழல் கோப்பை



கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது.

லால்பேட்டை, ஆண்டிபட்டி, தூத்துக்குடி, பெரிய தச்சூர், மதுரை பள்ளிகளுக்கிடையே போட்டி வலுத்து வருகிறது. மற்ற பள்ளிகள் முயற்சியைத் துரிதப்படுத்துங்கள். உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் நான்கு மாதங்களே உள்ளன.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....


....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

கோகுலம் க்விஸ்

1. இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடக்கவிருக்கும் இடம் ____________ .
2. பிரமிடுகளின் நாடு ____________ .
3. கேரட்டில் வைட்டமின் ____________ உள்ளது.
4. பருத்தி ____________ மண்ணில் நன்கு விளையும்.
5. சீவகசிந்தாமணி என்பது ____________ல் ஒன்று.
6. குதுப்மினார் உள்ள இடம் ____________.
7. உலக எழுத்தறிவு தினம் கொண்டாடப்படும் மாதம் ____________
8. கல்லணையைக் கட்டியவர் ____________
9. இனிமையாக ஒலி எழுப்பக் கூடியவை ____________ குயில்கள்.
10. உலகிலேயே எண்ணெய் வளம் அதிகமுள்ள நாடு ____________



இங்கு கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள். விடைகளை எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 31.8.2000


100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு

இந்த மாதமும் அடுத்த மாதமும் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி தொடரும். இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதோடு விரைவில் அனுப்பியும் வைக்க வேண்டும்.

1. 'வந்தே மாதரம்' பாடலை இயற்றியவர் யார்?

அ. ரவீந்திரநாத் தாகூர் ஆ. பங்கிம் சந்திர சாட்டர்ஜி

விரைவில் மற்ற மாவட்டங்களுக்கும் போட்டிக்கான வாய்ப்பு வரும். காத்திருங்கள். பரிசை வெல்லுங்கள்!



ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97



• பீனாமுல்

பீனாமுல்.

விளையாட்டு அரங்கம்!

கிரிக்கெட்

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையே யான 3 டெஸ்ட் போட்டிகள் இலங்கையில் நடைபெற்றன. இதில் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் வென்று தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி இலங்கையில் உள்ள கண்டியில் நடைபெற்றது. இதில் முதல் விக்கெட்டிற்கு 335 ரன்கள் எடுத்து சாதனை படைத்தது இலங்கை அணி. இதுவரை இலங்கை அணி முதல் விக்கெட்டிற்கு இந்த ரன்களைப் பெற்றதில்லை. இந்தப் போட்டியில் கேப்டன் ஜெயசூர்யா 188 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இது அவருக்கு ஐம்பதாவது டெஸ்ட் போட்டி. அவருடன் ஜோடி சேர்ந்து ஆடிய அட்டபட்டு இரண்டு செஞ்சுரிகளை விளாசினார்.



• ஜெயசூர்யா



• கடலில் ஒலிம்பிக் ஜோதி

தடகளம்

உக்ரைன் நாட்டின் கீவ் நகரில் அதெலட்டிக் போட்டிகள் நடைபெற்றன. இதில் இந்தியாவிலிருந்து கேரளாவைச் சேர்ந்த கே.எம். பீனாமுல் கலந்துகொண்டார். 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் தேசிய சாதனையை முறியடித்து முதல் இடத்தைப் பிடித்தார் பீனாமுல். பி.டி. உஷாவின் 15 ஆண்டு கால தேசிய சாதனையை 51.21 விநாடிகளில் கடந்து முறியடித்துள்ளார்.

இந்த ஆண்டு உலகத் தர வரிசைப் பட்டியலில் 35 இடங்களுக்குள் வருகிறார் பீனாமுல். தற்போது ரயில்வேயில் பணிபுரிந்து வருபவருக்கு வயது 25. செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிலிருந்து கலந்து கொள்கிறார்

ஒலிம்பிக்

செப்டெம்பர் மாதம் பதினைந்தாம் தேதி ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன. ஏதன்ஸ் நகரிலிருந்து எடுத்து வரப்பட்ட ஒலிம்பிக் ஜோதி ஆஸ்திரேலியாவின் பல நகரங்களில் வலம் வந்தது. குவீன்ஸ்லாந்தில் இந்த ஜோதி முதல்முறையாகக் கடலுக்கடியில் வெண்டி கிரெய்க் டங்கன் என்ற வீரரால் எடுத்துச் செல்லப்பட்டது.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


வண்ணம் தீட்டுங்கள்!





"எங்க அப்பாவுக்கு நான் கதவு மாதிரி..."
"எப்படி?"
"அடிக்கடி சாத்துவாரு."
– தஞ்சை தாமு

மீன் குஞ்சுக்கு வழி காட்டுங்கள்!




பிருந்தாவனம்

ஜோடி சேருங்கள்



விடை: 1-1, 2-3, 3-4, 4-6, 5-2, 6-5

இந்த அதிசய விலங்கில் இடம் பெற்றுள்ள உடற்பகுதிகள் எந்த விலங்குகளுக்குச் சொந்தமானவை?



விடை: கங்காருவின் பின்னங்கால்கள் மற்றும் வால்பகுதி, குரங்கின் கை (மனிதக் குரங்கு), ஒட்டகத்தின் முதுகு, முயல் காதுகள், காண்டாமிருகத்தின் தலைப்பகுதி.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka